மல்லிகை

ஆசிரியர் : டொமினிக் ஜீவா

ஏப்ரல் 1974

கே. ஏ. அப்பாஸ்
கிருஷன் சந்தர்
H. M. P. முஹிதீன்
திலக் குடா ஹெட்டி
எம். எச். எம். சம்ஸ்
'செம்பியன் செல்வன்'
சாந்தன்
எம். ஏ. கிஸார்
ப. ஆப்டீன்
எம். ஏ. நுஃமான்
மற்றும் பலர் எழுதியுள்ளனர்

விலை 60 சதம்

கலை, இலக்கிய மாத இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவிதமான

பற்றிக் சாயங்கள்

நெசவு நூல் சாயங்கள்

மற்றும்

சகல திராவகங்களுக்கும்

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

A. C. A. முத்தலிப் அன் கோ

227, டார்லி ரோட்,

கொழும்பு - 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆடுதல் பாடுதல்சித்திரம்-கவி
யாதியி னைய கலைகளில்-உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர்-பிறர்
ஈனநிலைகண்டு துள்ளுவார்'

மல்லிகை

ஒன்பதாவது ஆண்டு ஏப்பிரல் 1974 72

10—வது ஆண்டு மலருக்கான ஆயத்தங்கள்

10-வது ஆண்டு மலர் ஆகஸ்ட் 74-ல் வெளிவருவது சம்பந்தமாகச் சென்ற இதழில் வெளியிட்டுள்ள அறிவித்தலைப் பார்த்து பல இலக்கிய நண்பர்கள் எமக்குப் பரிபூரணமாக ஒத்துழைப்புத் தர முன்வந்துள்ளனர்.

மிக நெருக்கடியான சூழ்நிலையில் மிக மிக மகிழ்ச்சியான ஓர் இலக்கியச் சாதனையைச் செய்துமுடிக்க வேண்டுமென்ற அவாவுடனும், இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் ஒருவித ஆவேசத்துடனும் இந்தப் பாரிய பொறுப்பின் சுமையை எமது தோள்களில் சுமக்க நம்மை நாமே ஆயத்தப்படுத்தி வருகின்றோம்.

மல்லிகையின் இந்தப் பத்தாவது ஆண்டு ஒரு கணக்கெடுப்பாகவும் மல்லிகைக்கு அமைய வேண்டுமென விரும்புகின்றோம்.

மனதார மல்லிகைக்கு ஆக்கபூர்வமாக உதவ விரும்பும் நண்பர்கள் முடியுமானால் இலக்கியப் பற்றும் பாசமுமுள்ள வர்த்தகர்களை இனங்கண்டு விளம்பரம் தேடித் தரலாம். இது அவசர அவசிய தேவை.

சென்ற தடவை போல மலர் முடிந்ததன் பின்னர் தேவைக்கு எழுதாமல் முன்னரே மலர் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை நண்பர்கள் செய்துகொள்ளவேண்டும். - ஆசிரியர்.

மணக்கும் 'மல்லிகை'
கதை, பெயர்,
கவிதை, கட்டுரை,
கருத்து
எல்லாம் ஆக்கியோரர்
தனித்துவம்;
பொறுப்பும் அவரே!

மல்லிகை
ஆசிரியர் டொமினிக் ஜீவா
234- A கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்
(இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்
சிங்கள
எழுத்தாளர்
மாநாடு

1974 ஜூன்
29, 30—ல்
(சனி, ஞாயிறு)

கொழும்பில் நடைபெறும்

- சிங்கள - தமிழ் எழுத்தாளர், பத்திரிகையாளர், இலக்கிய ஸ்தாபனங்களின் பேராதரவு இதற்கு உண்டு.
- பிரபல தமிழ் - சிங்கள எழுத்தாளர்கள் பங்குபற்றுவர்.
- ஜனாதிபதியும், ஒரு தொழிலாளி, ஒரு விவசாயி, ஒரு எழுத்தாளன், ஆகியோரும் திறந்து வைப்பார்கள்.
- தேசிய ஒருமைப்பாட்டுக்கான தேவையை வலியுறுத்துவதுடன் வழிகாட்டும் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.
- தமிழ் - சிங்கள இலக்கியங்களை பரஸ்பரம் அறிமுகப் படுத்தும் அறிக்கைகள் இடம்பெறும்.
- தமிழ் - சிங்கள கவிஞர்கள் பங்குபற்றும் கவியரங்கு நடைபெறும்.
- தமிழ் - சிங்கள கலைஞர்கள் கூட்டாக கலந்துகொள்ளும் (நாட்டிய நாடகம்) கலாநிகழ்ச்சிகளில் ஒன்று.
- பொதுக் கூட்டம்.
- ஒருமைப்பாட்டு வேண்டுகோள்; (எழுத்தாளர்களுக்கும் மக்களுக்கும்).
- தேசிய ஒருமைப்பாட்டுத் திட்டம்.
- தமிழ் - சிங்கள இலக்கிய உறவுத் திட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை

வரலாற்று அநுபவத்தின் விளைவு

சமீப காலமாக நமது நாட்டு இலக்கிய விமர்சனக் கருத்தரங்குகளிலும் பொது மேடைகளிலும் ஒரு கருத்துப் போராட்டம் நடந்து வருவதைப் பலர் அவதானித்து வந்திருக்கலாம்.

'1956-க்குப் பின்னர்தான் இந்தத் தேசத்தில் ஓர் இலக்கிய விழிப்புணர்ச்சியும் ஆழமான இலக்கியத் தாக்கமும் ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் தேசத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் ரீதியான மாற்றமே!' என ஒரு சாரார் வாதிக்கின்றனர்.

இன்னொரு சாராரோ 'கிடையவே கிடையாது. இது ஒரு சார்பான அரசியல் பிரசாரம். 56-க்கு முன்னரே இந்த நாட்டில் இலக்கிய மறுமலர்ச்சி தோன்றி விட்டது' எனக் குரல் கொடுக்கின்றனர்.

இந்த இரண்டு சாராரின் வாதத்தையும் நாம் இலக்கிய நன்மை கருதியும் எதிர் காலத்திற்கான அத்திவாரத்திற்குரிய அடிப்படையை உண்மையாகவே தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியும் சற்றுச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியதவசியம்.

ஒரு நாட்டில் அரசியல் மாற்றம் ஏற்படாமல் வெறும் இலக்கியத்தால் மாத்திரம் இலக்கியத்தில் மறுமலர்ச்சி தோன்றிவிடும் என நம்புவது சிறுபிள்ளைத் தனமான வாதமாகும். ஏனெனில் தனிமனிதனின் வாழ்வில் கூட அரசியல் மாற்றங்கள் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய இன்றைய தேசிய சூழ்நிலையில் அரசியல் மாற்றத்தைக் கணக்கிலெடுக்காமல் வாதிப்பது கலை கலைக்காகவே என்ற கருத்துக் கோணத்திற்கே நம்மைக் கொண்டு சென்றுவிடும்.

அப்படியானால் 56--க்கு முன்னர் இந்த நாட்டில் தமிழ் இலக்கிய உலகில் மறுமலர்ச்சி தோன்றவில்லையா என்ற கேள்வி எழும்பக் கூடும்.

56-க்கு முன்னர் கௌரவிக்கத்தக்க படைப்பாளிகள் தமது ஆக்கங்களைச் சிருஷ்டித்துக் கொண்டுதான் இருந்தார்கள். இதில் எந்தவித சந்தேகமுமில்லை.

இதில் எங்கே முரண்பாடு ஏற்படுகின்றதென்றால் இவர்கள் என்னத்தைப் படைத்தார்கள்?— யாருக்காகப் படைத்தார்கள்?— எப்படிப் பட்டவர்கள் படைத்தார்கள்? என்பதில்தான் நமக்குள்ளே அபிப்பிராய வித்தியாசம் ஏற்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிலர் 56-க்குப் பின் ஏற்பட்ட தேசிய மாற்றம் ஏதோ சிங்கள மக்களின் பிரச்சினை என அரசியல் தப்புக் கணக்குப் போட்டு சரித்திரத் திருப்பங்களைத் தங்களுக்குச் சாதகமாகத் திசை திருப்புவதால் இலக்கியத்திலும் குட்டை குழப்ப முனைந்து செயல்படுகின்றனர்.

1956-க்குப் பின்னர்தான் இந்த நாட்டில் கலை இலக்கியத்திற்கான ஒரு அமைச்சரே தோன்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதையும் இவர்கள் உணர மறுக்கின்றனர். இது இந்த நாட்டுக் கலைக்கே ஒரு பெரிய வெற்றி.

56-க்கு முன்னர் மதிக்கப்படத்தக்க எழுத்தாளர் பலர் இருந்த போதிலும் கூட அவர்களுக்குச் சரியான சமுதாயப் பார்வையே இருக்கவில்லை.

சமுதாயப் பார்வை மட்டுமல்ல, எந்தவிதமான தத்துவ நோக்கோ, தத்துவார்த்த வழி நடத்தலோ அற்ற இவர்கள் ஏதோ சும்மா எழுதுகின்றோம் எனச் சொல்லிக் கொண்டார்களே தவிர, இலக்கியம் மனித சமுதாயத்தின் போராட்டக் கருவிகளில் ஒன்று என்பதைப் பூரணமாகவே இவர்கள் புரிந்து கொள்ளாமல் செயல்பட்டார்கள் என்பதையும் நாம் இவர்களினது எழுத்துக்களிலிருந்து கற்றுக் கொள்ளுகின்றோம்.

அறிவுத் துறையைச் சேர்ந்த இவர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களது மத்தியில் எத்தனையோ துன்ப துயரங்கள் அநுபவித்து வந்த போதிலும் கூட, அவர்களினது மனித உரிமைப் போராட்டத்தைத் தமது கதைக் கருக்களாக எடுத்தாளக் கூச்சப் பட்டார்கள் என்பதையும் இவர்களினது பலவீனங்களில் ஒன்றாக நாம் கருதுகின்றோம்.

இவர்களில் அநேகர் படித்த, மத்தியதர வர்க்க புத்திஜீவிகளாக இலக்கியத் துறைக்குக் காலடி வைத்ததுடன் கற்பனுலோக சஞ்சாரிகளாக நின்று கதை வடித்தார்களே தவிர, மண்ணில் காலூன்றி நின்று இந்த நாட்டு மக்களை — மக்களின் பிரச்சினைகளை- அவர்களினது ஆசாபாசங்களைத் தமது படைப்புக்களில் எடுத்தாளவில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இதில் ஒரு சிலர் சில முயற்சிகள் செய்திருந்த போதிலும் கூட அவர்கள் மக்கள் பிரச்சினையில் ஊறித் திளைக்காத காரணத்தால் வெற்றி பெறவும் முடியவில்லை என்பதும் நோக்கத் தக்கது.

இன்னும் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால், 56-க்குப் பின்னர்தான் நேரடியான உழைக்கும் வர்க்கத்திலிருந்து வந்தவர்கள். அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து தோன்றிய சாதாரணர்கள் இலக்கிய உலகில் காலடி பதித்து இந்தத் தேசத்தின் இலக்கிய உலகிலே ஒரு புதிய பார்வையையும் புதிய வீச்சையும் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதும் சரித்திர உண்மை. சமீப சரித்திரம் தனி மனிதர்களின் விருப்பு வெறுப்புகளுக்காக திரிக்கப்படக் கூடாது என்பதைப் புரிந்து கொள்வது அரசியல் உலகை விட இலக்கியத்துறைக்கு மிக மிக அவசியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிருஷ்டியின் நோக்காட்டு முனகல்கள்

மல்லிகை சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகளை நமது வாசகர்கள் மத்தியில் மிகத் தெளிவாக முன் வைப்பது நல்லதென்றே கருதுகின்றேன்.

சமீப காலமாகப் பல புதிய பிரதேசங்களிலும் கடல் கடந்துள்ள நாடுகளிலும் மல்லிகை மிக விரைவாகப் பரவி வருவதை அவதானிக்கும் பொழுது மனதில் நிறைந்த மகிழ்ச்சி ஏற்பட்டபோதிலும் கூட, இப்படியான சஞ்சிகைகள் நமது சக்திக்கு மீறி வளரும்பொழுதுதான் சில சிக்கல்களும் நிர்வாக ரீதியான இடஞ்சல்களும் ஏற்படுவது அநுபவ விளைவாகக் கண்ட உண்மையாகும்.

மல்லிகையைப் பொறுத்தவரை இவ்வளவு காலமும் நானே ராஜா, நானே சேனாதிபதி, நானே சேவகன், நானே கட்டியகாரன் என்ற முறையில் சகல வேலைகளையும் தனி மனிதனாகப் பார்த்து வந்தேன். இந்த நிலையில் இனிமேலும் தொடர்ந்து செயல்பட முடியாத நிலைக்கு மல்லிகையின் வளர்ச்சி என்னைக் கொண்டு நிறுத்தியுள்ளது.

எனவே தேவையற்ற — அநுதாபமற்ற — ஒழுங்காகச் சந்தா செலுத்த இயலாத இலக்கியப் பிரமுகர்களுக்குத் தொடர்ந்து மல்லிகை அனுப்ப இயலாது என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் தெரிந்து வைத்திருப்பது நல்லது.

சிலருக்குச் சந்தா கேட்டு எழுதினால் கோபம் கூட வருகின்றது! **தயவு செய்து இப்படியானவர்கள் மல்லிகையைத் தொடர்ந்து படிக்காமல் இருப்பதே** நமக்குச் **செய்யும் தொண்டாக அமையும்** என்பதையும் கூறிக் கொள்ளுகின்றேன்.

சந்தாவையும் மீறிப் பல நண்பர்கள் மேலதிக பணமாக தருகின்றனர். மற்றும் சிலர் அன்பளிப்பு என்ற முறையில் தமது நன்கொடைகளையும் தந்துதவுகின்றனர். இவர்களது பொருளாதார உதவிகளைப் பெற்றுக்கொண்டு தினசரி திட்டமிட்டு வளரும் மல்லிகையை ஒரு சில பிரமுகர்களுக்கு ஓசியில் அனுப்பி அன்னாருக்கு இலக்கியத் தீனி போட நான் எந்தச் சமயத்திலும் தயாராக இல்லை.

இது ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சிக்கு உதவும் மனப்பான்மை உள்ளவர்களின் ஆதரவைத் துஷ்பிரயோகம் செய்யும் குற்றத்திற்கு என்னை ஆளாக்கி விட்டுவிடும்.

மற்றும் சிலர் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ள மல்லிகை விமர்சனத்தைப் பார்த்து விட்டு புது உறவு கொள்ள முன் வருகின்றனர். இவர்களைப் பொறுத்தவரை மிக மிகக் கவனமாக இருக்க வேண்டிய மனப் பக்குவம் எனக்குண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு சிலர் மந்திரி ஒருவரின் புத்தக வெளியீட்டில் பலர்— சிங்கள நண்பர்கள் உட்பட — மல்லிகையின் இலக்கிய சேவையை யும், தேசிய ஒருமைப்பாட்டிற்காக அது செய்து வரும் தொண் டையும் போற்றிப் புகழ்ந்துள்ளதின் காரணமாக நெருங்கிய ஆத ரவாளர்களாகக் காட்டிக் கொள்ள முன் வருகின்றனர்.

இவர்களைப் பற்றியும் சரியாகக் கணிப்பீடு செய்யும் உளப் பாங்கும், வெகுஜன இயக்கங்களில் தினசரி தொடர்புள்ளவன் என்கின்ற முறையில் எனக்கு இருக்கின்றது.

இதே சமயம் மல்லிகையை உளமார நேசிக்கும் நண்பர்கள் ஏராளம் ஏராளமாகப் பெருகிவருகின்றனர்.

இவர்கள் அத்தனை பேர்களையும்தான் நான் மனப் பூர்வமாக நம்புகின்றேன். இவர்களினது ஆத்ம பலத்தில் நின்றுதான் என் னுடைய சகல போராட்டங்களையும் நடத்துகின்றேன். வரும் நெருக்கடிகளை உடனுக்குடன் தீர்க்கின்றேன்.

எத்த நெருக்கடி வந்தாலும் எவ்வித சிக்கல் ஏற்பட்டாலும் மல்லிகைக்கென என்னை மறந்து உழைக்கும் பொழுது — சில சம யங்களில் சரீர பிரயாசைப்படும் பொழுது — இதில் இருக்கும் சுவர்க்க சுகம் இருக்கின்றதே — அது ஒரு தனிச் சுவை! ஏனென் ருல் வெறும் விற்பனவுப் பண்டமாக இதை நான் உருவாக்க விரும்பவில்லை. இந்தக் கால கட்டத்தின் தவிர்க்க முடியாத ஓர் இலக்கியக் குரலாக - இன்றைய போராட்டக் கட்டத்தின் வலிமை மிக்க ஆயுதமாகவே ஒவ்வொரு இதழையும் நான் கருதுகின்றேன். வந்து சேரும் புதிய புதிய நண்பர்களிடத்தே இனங்கண்டு நான் நேசிக்கும் நண்பர்களின் பக்க பலமும் என்னை ஒரு வலிமை மிக்க செயலாளியாக்கி வருவதையும் உணருகின்றேன்.

இதில் மகிழ்ச்சியான ஒரு செய்தியையும் நான் குறிப்பிட வேண்டும். புங்குடுதீவைச் சேர்ந்த ஸ்ரீ பராசக்தி வித்தியாலய மாணவர்கள் ஒவ்வொருவரும் ஐந்து பத்துச் சதங்களாகச் சேர்த்து மல்லிகைக்கு 5 ரூபாவைத் தந்திருக்கின்றனர் என்ருல் அந்தப் பிஞ்சு நெஞ்சங்களை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை. மிகப் பெருமையுடன் இதை நான் அங்கீகரிக்கின்றேன்.

ஸ்ரீ பராசக்தி வித்தியாலய மாணவர்கள் புங்குடுதீவு.	5 - 00
க. சதாசிவம் எழுத்தாளர், கொத்மலை.	20 - 00
த. சண்முகலிங்கம் யாழ்ப்பாணம்.	10 - 00
பி. எம். அப்துல் சத்தார் யோகபுர, திக்வல்ல.	5 - 00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடிதங்கள்

நலமுடையேன். நலமறிய நனிவேட்கை. நாட்டுச் செய்திகளை அறிய மிக்க அவா. முழுப்படியே அறிய முடியாது இருக்கின்றது. இங்கு மகிழ்ச்சிகரமான வாழ்க்கை. மறக்கமுடியாத நினைவுகள். பிரிக்கமுடியாத நட்புகள். இவையனைத்தோடு எப்படிச் சோவியத்தின் சமூகம் என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டுமா? நான் சொல்லி நீங்கள் அறியவேண்டியதில்லை. என்றாலும் நான் கண்டதைச் சொல்வதில் எனக்குப் பெருமையல்லவா?

எல்லோருக்கும் வேலை, இருக்க எல்லா வசதிகளும் படைத்த மாளிகைகள். பட்டினி, தரித்திரம், வறுமை, பொய், சூது அனைத்தையும் தேடிப்பார்த்தாலும் கிடைக்காத அற்புத வாழ்வு.

காதற் பறவைகளாய் மக்கள் கூட்டம், எங்கு பார்த்தாலும் சிரிப்பும் சிந்தனை விருந்தும், அன்பும் அறிவும், பாட்டும் கூத்தும் அலைமோதுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த வாழ்க்கைகளினிடையே சமாதானம் வேண்டுமென்ற வேட்கையும் தாபமும் மேலோங்கி நிற்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

என்று தணியுமோ எங்கள் இத்தாகம்.

தொடர்ந்து, நான் இங்கு பல தமிழ் நாட்டுத் தோழர்களுடன் தொடர்பு கொண்டுள்ளேன். மல்லிகை வாசகர்கள் அவர்கள். குறிப்பாகத் தாமரையில் கதைகள் எழுதும் கண்ணன் என்பவர் இங்கு வேலை செய்கிறார். அவருடன் தொடர்பு கொண்டுள்ளேன். ஒரு தமிழ் தெரிந்த ரஷ்யருடனும் தொடர்பு வைத்துள்ளேன்.

வேறு என்ன? ஆசிரியனுக்கு எழுதும்போது எழுத்தாளனுக்கு உரிய பாணியில் எழுத வேண்டும் என்பது எனதவா, ஆனால் முயற்சிக்கின்றேன்; முடியவில்லை. விரைவில் எனது முயற்சிகள் வெற்றியளிக்கும் என்பது எனது நம்பிக்கை. அதுவே எனது குறிக்கோளும். இந்த ஓராண்டு காலத்தில் மல்லிகையின் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் என்ன? பொருளாதார ரீதியில் அச்சுயந்திரங்கள் ஏதாவது வாங்கியுள்ளீர்களா? அறிய அவா. விபரமான பதில் வேண்டுகின்றேன்,

மாஸ்கோ.

என். ஜெயபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் தனி இலக்கிய இலட்சிய வெறியோடு மல்லிகை ஆரம்பிக்கப்பட்டு ஒன்பது வருடங்களைத் தாண்டிச் சென்று பத்தாவது ஆண்டை நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஈழத்தில் ஒரு முற்போக்கு கலை இலக்கிய மாத இதழ் மல்லிகை என்றால் மிகையாகாது.

பத்திரிகைத் தொழிலில் நல்ல பயிற்சியும், துடிப்பும், அனுபவமும் தன்னகத்தே கொண்ட அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்கள் நல்ல இலக்கியம் சிருஷ்டிப்பதே ஒரே குறிக்கோளாகக் கொண்டுள்ளார். ஒரு விழுமிய இலட்சியமுடைய பத்திரிகை ஆசிரியருக்கு மட்டும்தான் இவ்வகையான தரமான இலக்கிய இதழை வெளியிடத் துணிவுண்டு. எனவே, மல்லிகை ஆசிரியரின் இலக்கிய சேவையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

மல்லிகை தாங்கிவரும் சிறுகதை, கவிதை, நாடகம், விமர்சனக் கலை, இலக்கியச் சந்திப்புகள், இலக்கியக் கடிதங்கள், புதுக்கவிதை போன்ற சிறப்பு அம்சங்களாகும். ஈழத்துப் பத்திரிகையில் புதுக்கவிதைக்கு களம் அமைத்துக் கொடுத்தது முதன் முதலாவதாக மல்லிகைதான். இதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இன்று புதுக்கவிதைகளில்லாத பத்திரிகைகள் கிடையாது. இந்திய முற்போக்குச் சஞ்சிகைகளான சரஸ்வதி, தாமரை முதலியன கலைஞர்களின் படத்தை அட்டையில் பிரசுரித்துக் கௌரவித்து வருவதுபோல, ஈழத்தில் அப்பணியைச் செய்துவரும் மல்லிகையின் பணி மகத்தானதே.

ஈழத்தில் தலைசிறந்து விளங்கும் முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்களின் முற்போக்கான சிந்தனையை வெளியிடுவதில் மல்லிகை ஒருபோதும் பின்நிற்பதில்லை. இலைமறை காய்போல் விளங்கிய இளம் எழுத்தாளர்களுக்கு மல்லிகை உறைவிடம் அளித்தது. அவர்களை இனங்காட்டி முதன் முதலில் அறிமுகம் செய்து வைத்தது மல்லிகைக்குரிய சிறப்பாகும்.

தமிழ் நாட்டில் தன்னிகரில்லாத இலக்கியப் பத்திரிகைகளான எழுத்து, சரஸ்வதி மக்கள் மத்தியில் எண்ணற்ற வாசகர்களை ஒரு காலத்தில் பெற்றிருந்தது. இதற்குக் காரணம் இவ்விதழ்களின் தரமும் தனி நடையும்தான். இதேபோன்று மல்லிகையும் சர்வதேசிய இலக்கியம், கருத்தரங்கம் — விவாதமேடை, நினைவில் நிற்கும் முன்னுரைகள், திறனாய்வுக் கட்டுரைகள், இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், அயல்நாட்டு இலக்கிய மொழிபெயர்ப்புக்கள் போன்ற சிறப்பம்சங்கள் இதழை அலங்கரிக்க வேண்டும். ஆசிரிய முன்னுரைப் பகுதியில் தற்கால இலக்கிய நிகழ்வுகளை அப்பட்டமாக படம்பிடித்துக் காட்டவேண்டும். இத்துறையில் மல்லிகை ஓரளவு வெற்றி கண்டுள்ளது எனலாம். இது இதழை அலங்கரிக்கும் முதற் பகுதியாகும். எனவே இப் பணியில் மல்லிகை யதார்த்த பூர்வமான கண்ணோட்டத்தைச் செலுத்த வேண்டும். எனவே; ஈழத்தில் வெளியிடும் இலக்கியப் பத்திரிகையான மல்லிகை இப்புதிய பகுதிகளை ஆரம்பித்து இளம் எழுத்தாளர்களின் உணர்வுகளைத் தட்டிக் குரல் எழுப்ப வேண்டும். அப்போதுதான் மல்லிகை மக்கள் இலக்கிய மலராகத் திகழமுடியும்.

மாத்தளை உசைர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிமலை வெடித்துச் சீறியது

சிங்கள மூலம் — திலாக்குடாஹெட்டி

தமிழில் — பா. ரத்நஸபாபதி அய்யர்

விவசாய மன்னர்களைக் கௌரவிக்கும் கூட்டத்தில் 'இது போன்று நாம் நன்றாக வாழ்ந்த காலம் இனிமேல் வரப் போவதில்லை' என்று மந்திரியார் பேசினார். நாங்கள் மந்திரியின்பேச்சுக்கு கைதட்டினோம்.

'இந்த சந்தோஷமான முகங்களில், உங்களின் மன நிறைவான சிரிப்புக்களில் இருந்து தெரிகிறது நீங்கள் எவ்வளவு சந்தோஷத்துடன் இருக்கிறீர்கள் என்று. நாங்கள் இன்னும் சிறிது காலத்தில் இரண்டாவது பராக்கிரமபாகுவின் யுகத்துக்கு காலடி எடுத்து வைக்கப் போகிறோம்' என்று அவர் பேசினார். நாங்கள் இன்னும் நன்றாகக் கைதட்டி ஆரவாரித்தோம். பிரதம பேச்சாளரைப் பார்த்துச் சந்தோஷப் பட்டோம். அவரின் பேச்சுக்கு கைதட்டினோம்.

'அந்த மந்திரி பிறந்ததுக்குப் பின்பு இந்த மாதிரி நன்றாக வாழ்ந்த காலம் அவரின் எந்தப் பரம்பரையிலும் வரவில்லை' என்று நான் நையாண்டி கலந்த தொனியில் கூறினேன். கூட்டம் பார்த்துவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்த நாங்கள் இப்படியாக நையாண்டியாகக் கதைத்தோம்:

'நீ இந்தமாதிரிக் கதைக்க வேண்டாம். அவர் புண்ணியம் செய்த மனுஷன்; எங்களைப் போல பாவிகள் இல்லை அவர்' என்று மாமா எனக்குச் சொன்னார்.

'ஒன்று உண்மை மாமா: நாங்கள் தேர்தல் காலத்தில் அவர்களுக்காகப் பகைத்துக் கொள்கிறோம். அவர்கள் எம்.பியாகிறார்கள். பென்ஸ் கார் கிடைக்கிறது; பணம் கிடைக்கிறது; பெருமை கிடைக்கிறது; மேல்த்தட்டுக்குப் போகிறார்கள். பட்டாடைகள் பட்டங்கள் தானாகவே வந்தடைகின்றன. திடீரென பிறநாட்டுப் பயணங்களும் கிடைக்கும். நில பாவாடையின்மேல் தோறணங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் கீழ் யானைகளின் மேல் பவனி வருவார்கள். எங்களுடைய முகத்தைப் பார்த்து 'நான் உங்களுக்காகவே வாழ்கிறேன்' என்ற மாதிரி சிரிப்பார்கள்...... நாங்கள் கஷ்டத்தை அனுபவிக்கிறோம்'

'அது எங்களின் பாவபலன்'

'மாமா எங்களுக்கு எங்களின் அந்தப் பாவ பலனை மாற்றம் செய்ய முடியும். பணக்கார முதலாளி வர்க்கம் எங்களிடம் இருந்து சுரண்டிச் சேர்த்த பணத்தை அவர்களிடம் இருந்து பறித்து நாட்டுடமையாக்கினால் பணத்தின் பலத்தை எல்லோரும் அனுபவிக்கத் தொடங்கும் நாளில், நீங்கள் சொல்லுகிற பாவபலன் தொலையும். மந்திரியின் கண்களுக்கு எங்களின் ஒட்டிய வயிறு தெரிவதில்லை? எங்களின் குடல்கள் உணவு இல்லாமல் நெளிவது, வயிற்றில் நெருப்பு எரிவது, எங்கள் நெஞ்சு எரிமலையாவது அவரின் கண்களுக்குத் தெரிவதில்லைப் போலும்'

மாமா ஒன்றும் பேசவில்லை.

★

ஒன்றுமேயறியாத கிராமத்தவன் பணக்கார முதலாளியின் வயலில் அடிமையாய் வேலை செய்கிறான். வயல் பசுமை பெறுகிறது. சேற்றில் நிற்காத முதலாளி விவசாய மன்னராக தெரிவு செய்யப்படுகிறார். நாடு பூராவும் விவசாய மன்னர்கள் அவதரிக்கிறார்கள்!

★

விவசாய மன்னராகத் தெரிவு செய்யப்படவேண்டியது பண்ணை முதலாளி அல்ல. கஷ்டத்துடன் வேலை செய்து களைப்படைந்து வியர்வையைச் சிந்தி நிலத்தைப் பண்படுத்தும், வயலைப் பசுமைபெறச் செய்யும் நான்தான் என்று அப்பா வெண்டாவெறுப்புடன் சொன்னார்.

'அப்பாவுக்கு இப்ப என்டாலும் புரிகிறதா? எல்லாப் பண்ணை முதலாளிகளும் இப்படியே தான். வயிற்றுக்குக் கஷ்டப்படும் ஏழைகள் கஷ்டப்பட முதலாளி பரிசுபெற......' நான் வீட்டுக்குள் இருந்துகொண்டு சொன்னேன்.

'மகனே பண்ணை முதலாளிக்கு எதிராகப் பேசாதே. நான் உன்னை யூனிவேசிற்றிக்குப் படிப்பிக்க வீட்டையும் நிலத்தையும் ஈடுவச்சனான். அந்தக் காலக்கெடு முடியப்போகிறது. நீ உந்த சிவப்பு சட்டைக்காரன்களோடை சேராமல் இருந்திியெண்டால் வாத்தியார் வேலை எப்பவோ எடுத்திருக்கலாம்'

'ஏன் அப்பு சிவப்புச்சட்டைக் காரர்களை யூனிவேசிற்றிக்கு எடுக்கவேண்டும்'

பீஏ படித்து முடித்து வேலை எதுவும் கிடைக்காமல் வீட்டில் மூன்று வருடங்கள் கழிந்து கொண்டிருக்கின்றன. பணக்காரப் பிசாசுகளும் அவர்களின் அடிவருடிகளும் பின்பக்கக் கதவால் போட்டப் பந்தம் பிடித்து, பலி கொடுத்து வேலை எடுப்பதுதான் வழி என்றால் பேராதனையில் படித்த தத்துவத்தின் பயன் என்ன?

★

'குனே நாங்கள் இந்த முறை பண்டார முதலாளியின் மகனுக்கு எதிராக நேரடியாகவே, முகத்துக்கு திரை போடாமல் வேலை செய்ய வேண்டும்' என்று நான் சொன்னேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தம் பிடித்து, பலிகொடுத்து வேலை வாய்ப்புகளைப் பெறமுடியாத பட்டதாரிகள், படித்த இளம் பரம்பரையினர்கள் எல்லோரும் எங்கள் பக்கமாக நின்றார்கள். நாங்கள் எல்லோரும் சுமனசேகராவுக்காக தேர்தலில் வேலை செய்தோம்.

'எப்படி அண்டைக்கு மந்திரியின் பேச்சு. நாங்கள் பசியிலை துடிக்கிறோம். எங்களின்ரை ஒருகொத்து அரிசி வெட்டியாச்சு. அவரின்ரை பந்தக்காரர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்திருக்கினம். தொழிலாளி பண்ணையிலை கஷ்டப்பட சேற்றிலையே காலை வைக்காத பண்ணை முதலாளி விவசாய மன்னராகிறார். இந்தியாவுக்கு ஏரோப்பிளேனிலை சுற்றுப் பிரயாணம் செய்ய அனுப்பி வைக்கினம். நாங்கள் இந்தமாதிரியான பித்தலாட்ட முறைகளை மாற்றி வைக்கவேண்டும். எங்கடை பிரச்சினைகளை இவையளால் தீர்க்கமுடியாது. சாமான்கள் நெருப்பு விலை. அவர்கள் பராக்கிரம யுகத்தில் நிக்கினம். நாங்கள் பசியுகத்திலை நிற்கிறம். நாங்கள் சுமனசேகரா பக்கம் வேலை செய்து வெற்றியடையச் செய்ய வேண்டும்.

சுது அப்பு வயலில் வேலை செய்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்தார். எங்கடை கதையைக் கேட்டதும் மண்வெட்டியை நிலத்தில் வைத்தார்.

'பண்டார முதலாளி எங்கடை வீட்டுக்கு நெருப்பு வைத்தாலும் வைப்பார்' என்றார்.

'அந்த நெருப்பு எங்களிடமும் உள்ளது சுதுமாமா. எங்கடை வயிற்றிலை நெருப்பு, நெஞ்சத்திலை நெருப்பு, பணக்கார முதலாளிகள் எங்களைச் சுரண்டும் போது எங்கடை உடம்பு முழுக்க நெருப்பாகிறது. மாமா எங்களுக்கு எப்பவும் நெருப்புடன் இருக்க முடியாது மாமா?

நாங்கள் இரவு பகலாக தேர்தலுக்காக வேலை செய்தோம். மந்திரி விவசாய மன்னர்களைத் தெரிவு செய்தார். நாங்கள் ஒவ்வொரு வீடுவீடாகச் சென்றோம். மந்திரி மேடையில் மக்களைச் சந்தித்தார். நாங்கள் கூலி வேலை செய்து தினம்தினம் பசியைத் தீர்க்கும் மக்களிடம் சென்று கதைத்தோம். மந்திரி பணக்கார வர்க்கங்களிடமும், பரம்பரைச் சாதித் திமிர் பிடித்த கல்வீட்டுக் காரர்களிடமும், கொள்ளை லாபம் அடித்துக் கொழுக்கும் கடைக்கார முதலாளிகளிடமும், கசிப்பு வியாபார மன்னர்களிடமும் கதைத்தார். நாங்கள் பசியுடனும் களைப்புடனும் தேனீர் குடித்து பாண்துண்டைச் சாப்பிட்டுக்கொண்டு சின்னக் கிராமம் சேரி எல்லா இடமும் சென்று ஆதரவு தேடினோம். மந்திரி வாடி வீட்டில் நாகரிகக் கனவான்களுடனும் அவர்களின் மனைவிமாருடம் விஸ்கி குடித்துக் கொண்டு ஆதரவு தேடினார்.

★

'சியாத்து உனது மகன் சிவப்புச் சட்டைக்காரர்களோடு சேர்ந்து கொண்டு ஊரைக்கெடுப்பதாக கேள்வி' என்று விதானையார் கேட்டார்.

விதானையார் அய்யா யாரோ உங்களுக்குப் பொய் சொல்லி இருக்கிறார்கள்' என்றார் சியாது. அவரின் முகம் பயத்தால் வியர்த்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொய் இல்லை விதானை யார். அது முழுக்க உண்மை தான். சாதாரண படிப்பறிவு இல்லாத கிராமத்து மக்கள் கஷ்டத்திலை இருக்க நீங்கள் விவசாய மன்னராக முடிசூட் டப் படுகிறீர்கள். பிற நாட் டுக்கு ஊருலாத்தப் போகிறீர் கள்' என்றேன் நான்.

'அப்ப நீதான் வெளிக்கிட் டிருக்கிறீரோ இதை எல்லாம் நிற்பாட்ட'

'அப்பிடிச் செய்ய வெளிக் கிட்ட ஆயிரக் கணக்கான மக் களில் நானுமொருவன்'

'நீ எனக்கெதிராக, பண் டார முதலாளிக்கு எதிராக வேலை செய்வதானல் இந்த வீட்டிலை இருந்து வெளிக்கிட வேண்டி வரும். நீ யூனிவே சிற்றியிலை படிச்சுக் கிழிக்க இந்த வீடு, நிலம் எல்லாம் எனக்கு ஈடு வச்சு இருக்கிறுர் உன்ரை கொப்பர் தெரியுதோ'

'இன்னமும் அது உங்கடை உரிமையாகவில்லை விதானை யார். தேர்தலுக்குப் பிறகு உந்த ஈடு எல்லாம் முடிந்து விடும். அதுமட்டுமல்ல உங் கடை — உங்களைப்போல உள்ள நிலமும் முதிசமும் தேர்தல் அன்று எங்களைப் போல இருக் கிற ஏழைகள் கையிலை தெரி யுமோ' என்றேன் நான்.

'டேய் பொடியா உந்தக் கதைகளை நிற்பாட்டு' சும்மா பயத்துடன் சொன்னுர்.

'நீ படிச்சது போதாது. நீ தேர்தல் வேலைகளை நிற்பாட் டாட்டிப் பார் என்ன நடக்கி றது என்று' விதானையார் கர்ச்சித்தார்.

'என்ன செய்யப் போகிறீர் விதானையாரே' நான் கத்தி னேன்.

அம்மாவும் அப்பாவும் என்னை ஏசினுர்கள். விதானை யாரைச் சமாதானப் படுத்தி வெளியில் கூட்டிக்கொண்டு போனுர்கள்.

★

தேர்தல் வேலைகள் உச்சக் கட்டத்தை அடைந்தன. விதா னையார், பண்டார முதலாளி ஆகியோரின் ஏவல் நாய்களின் கரைச்சல் எங்களுக்கு இருந்தது. இருந்தும் நாங்கள் அவற்றைச் சமாளித்துக் கொண்டோம்.

'நாங்கள் ஏன் கஷ்டப்படு கிறேம். அரிசி, மா, பருப்பு ஏன் சிறப்பாகச் சொன்னுல் உணவுப் பொருட்களை விலை கொடுத்து வாங்க முடியாத நிலையில் இருக்கிறேம். பணக் காரர்களிடம் பணம் இருப்ப தால் ஆயிரக்கணக்கான ஏக் கர் தோட்டங்கள் இருப்பதால் அவர்களால் என்ன விலை கொடுத்தும் வாங்க முடிகிறது. பணக்காரர்களும் நாங்களும் ஒரே விதமாகத்தானே பிறந் தோம். நாங்கள் ஓலைக் குடிசை யில் முடங்கி வாழ்கிறேம். அவர்கள் மாளிகையில் வாழ் கிறுர்கள். இது என்ன பேதம்; இது எவ்வாறு உண்டானது. மனிதனை — எங்களை — மனிதன் சுரண்டிக் கொழுக்கும் சமூக அமைப்பு முறையை மாற்ற வேண்டும். இந்த நாட்டில் வாழக்கூடிய பணக்காரர்களை யும் பண்ணை முதலாளிகளையும் இல்லாமல் செய்து இந்த நாட்டைப் புனிதப்படுத்தவேண் டும். எங்கள் அனைவருக்கும் பொதுவான எல்லாரும் எல் லாம் பெற்று இல்லாமை இல்லாது ஒருந்த ஒரு சமுதாய

அமைப்பை எங்கள் தாய் நாட்டில் உண்டாக்கி ஒளிமயமான நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் ஏற்படுத்த எங்களுக்கு உதவ வேண்டும்'

எங்கள் பேச்சுக்களைக் கேட்டு மக்கள் எங்களை ஆசிர்வதித்தனர்.

★

தேர்தல் அன்று பகல் முழுவதும் சுமனசேகராவுக்காக வேலை செய்துவிட்டு களைப்புடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். ஒரு அடி விழுந்தது தலையில். அந்த நேரம்

முதலாளித்துவ நாய்கள்
பணக்காரப் பிசாசுகள்
பசி, பஞ்சம்
விதானையார்
அம்மா, அப்பா
குமாரி

எல்லாம் நினைவுக்கு வந்தன. தலைவலித்தது. நினைவிழந்தேன்.

எனக்கு நல்ல நினைவு வந்தது மறுநாட் காலை. அம்மா அப்பா குமாரி எல்லோரும் எனது கட்டிலைச் சுற்றி நின்றூர்கள். அது ஒரு ஆஸ்பத்திரி என்பதைப் புரிந்துகொண்டேன்.

'மகனே உனக்குக் கடவுள் துணைநிற்கிறூர்' அம்மா அம்மா என்று நான் முனகினேன்.

அம்மாவின் கண்ணீர் என் கையில் விழுந்தது. வஜிர அண்ணுவுக்கு இப்ப சுகம் என்று குமாரி அழுது வரண்டுபோன குரலில் சொன்னுள்.

'குமாரி தேர்தலில் எங்கள் பக்கம் வெற்றியா?'

'ஆம் அண்ணு, எங்களுக்கு இதுவரை கிடைக்காத வெற்றி. சுமனசேகராவுக்கு பத்தாயிரம் பெரும்பான்மை வாக்குகள்.

'எனக்கு விதானையாரைப் பார்க்க வேண்டும் போல் உள்ளது'

'அண்ணுவுக்கு சுகமானதும் போய்ப் பார்க்கலாம்'

'என்ன குமாரி ஆஸ்பத்திரியிலை ஒருவரும் இல்லை. என்னைப் பார்த்து மருந்து கட்டுவதற்கு ஒருவரும் இல்லையா'

'போக முடியுமான அனைவரும் வெற்றியைக் கொண்டாட ஊர்வலத்தில் கலந்து கொள்ளப் போய்விட்டார்கள்'

'எங்கடை புதிய எம்பி எங்கே. அவரும் ஊர்வலத்திலா?'

'அவரை வெற்றி ஊர்வலத்தில் கிராமம் முழுவதும் அழைத்துக்கொண்டு போகிறூர்கள். இன்று பெரிய திருவிழாமாதிரி' டவுனிலை வெற்றி ஊர்வலம்.

'மகனுக்கு மருந்து கட்ட ஒருவரும் இல்லையே. டாக்டர் வந்தாலாவது போதும்' என்று அம்மா சொல்லி அழுது கண்ணீர் விட்டாள்.

'அம்மா நான் இப்ப இறந்து போனுலும் கவலை இல்லையம்மா. எங்களுக்கு வெற்றி கிடைத்து விட்டது. இன்று நானும் வெற்றி ஊர்வலம் நடத்த வேண்டும். இவ்வளவு காலமும் இதயத்துள் இருந்த தேர்தல் உத்துவேகம் வாக்களிப்பு நிலையத்திலை கூட்டுக்குள் நின்று காகிதத்திலை புள்ளடி போட்டுக் கொண்டது போதாது. ஏழை மக்களுக்கு எதிராக வேலை செய்த இந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணக்கார முதலாளிகளின் வீடுகள் இருக்கும் வீதி பூராவும், எங்களுக்கு ஆதரவு தந்த ஏழைகள் வாழும் சேரி வழியாகவும் வெற்றி ஊர்வலம் நடத்த வேண்டும். எங்கள் இதயங்களில் பொருமிக் கொண்டிருந்த எரிமலை வெடித்து அக்கினிக் குழம்பை உமிழ்ந்து கொண்டிருக்கிறது. எனக்கு ஊர்வலத்துக்குப் போக ஆசையாய் இருக்கிறது அம்மா? குமாரி நீயாவது ஊர்வலத்துக்குப் போய் இருக்கலாமே?' என்றேன்.

'வஜ்ஜிர அண்ணை நீங்கள் தலைமை தாங்கி நடத்த வேண்டிய ஊர்வலத்தை நீங்கள் இல்லாமல் மனக் கஷ்டத்துடன் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனக்குப் போக ஆசைதான். ஆனால் நீங்கள் இங்கே இருக்க?'

'நான் ஊர்வலத்தை நடத்தினால் விதானையார் போன்ற பணக்காரர்கள், சாதித் திமிர் பிடித்த மாளிகை வாழ் வெறியர்கள், கள்ள வியாபாரிகள், கசிப்பு மன்னர்கள், சமூகத் துரோகிகள், தாய்நாட்டை நேசியாத சுயநலப் பிரீதிகள் ஆகியோரின் குருதியில் நனைத்துச் சிவப்பேற்றிய பதாகையுடன்தான் ஊர்வலத்தை நடத்துவேன்' என்றேன் நான்.

ஆஸ்பத்திரிக்கு வெளியில் வெற்றிக் கோஷங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. ஊர்வலம் வரவரக் கிட்ட வந்துகொண்டிருந்தது. ஆஸ்பத்திரி வாசலில் நின்ற ஊழியர்களும் அதில் கலந்துகொண்டார்கள்.

தலையில் இருந்த அடிகாயத்திலிருந்து குருதி சொட்டுச் சொட்டாக வழிந்து நான் போட்டிருந்த சட்டையை, பெனியனை சிவப்பாக்கி இருந்தது. அதனை நான் பார்த்தேன்.

'இன்று நாடு பூராவும் சிவப்பு, இரத்தநிறமாக இருக்கும் குமாரி. அந்த சிவப்பேறிய இந்த நாட்டைப் பார்க்க வேணும்போல் உள்ளது குமாரி' என்றேன் நான்.

குமாரியின் முகத்தில் புன்னகை பரந்தது. ★

மல்லிகை

புதிய சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா	8-50
தனிப்பிரதி	-60
இந்தியா, மலேசியா	10-00

(தபாற் செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்ஜெனித்சின் ஒரு துன்பியல் நாடகம்

கே. ஏ. அப்பாஸ்

மேற்கு ஜெர்மன் விமான நிலையத்தில் சல்ஜெனித்சின் வந்திறங்குவதற்கு இரு வாரங்களுக்கு முன்பு, நான் 'சல்ஜெனித்சின் ஒரு துன்பியல் நாடகம்' என்று ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். இன்று அந்தத் தலைப்பு, பல வழிகளில் உண்மையாகி விட்டது.

சில காலம் மேலையப் பத்திரிகைகளின் அட்டைகளையும், முதல் பக்கங்களையும் அலங்கரித்து வந்த திருவாளர் சல்ஜெனித்சின், இன்று உள் பக்கங்களுக்கும் கடைசிப் பக்கங்களுக்கும் சென்றிருப்பது தற்செயலானதல்ல. இன்னும் சில காலம் செல்லச் செல்ல, கடைசிப் பத்திக்குப் போய், அதன் பிறகு பூரணமாக அவர் மறக்கப்பட்டு விடுவார். முதலாளித்துவ சக்திகளின், சமாதான விரோதிகளின், பிற்போக்காளர்களின் கருவிகளாகவும், கைப்பொம்மைகளாகவும் இருக்கச் சம்மதித்து, சோவியத் எதிர்ப்பு வீர வாசகங்களை உரக்கத் தலைபாட்டும் எல்லா சோவியத் பிரஜைகளுக்கும் நேர்ந்த கதி அதுதான்.

அத்தகைய பிரகிருதிகள் சோவியத் நாட்டில் இருக்கும் வரை அவர்கள் வீரர்கள் என்றும், மனித சுதந்திரத்திற்குப் போராடும் தலைவர்கள் என்றும் தியாகிகள் என்றும் கூடப் போற்றப்படுகின்றனர். ஆனால், எப்பொழுது அவர்கள் அந்த நாட்டுப் பூகோள, சித்தாந்த எல்லைகளைக் கடந்து வெளியேறி 'சுதந்திர உலகு' என்றழைக்கப்படும் பகுதியில் காலெடுத்து வைக்கிறார்களோ, அப்போதே அவர்களுக்குள்ள செய்தி மகத்துவமும், பரபரப்பும் மதிப்பும் குறைந்து விடுகின்றது.

இந்தியாவின் விருந்தோம்பும் பண்பை, பண்பற்ற முறையில் பயன்படுத்தி, முதலாளித்துவ உலகினுள் காலடி எடுத்து வைத்த ஸ்டாலினது மகளான அலிலியுயேவா, சில காலம் பத்திரிகைகளின் முதற் பக்கங்களை அலங்கரித்தார். ஆனால், சில ஆண்டுகள் சென்ற பின்னர் அவர் திருமணம் செய்து கொண்டாலோ, அல்லது விவாகரத்துச் செய்து கொண்டு, மீண்டு மணந்து கொண்டாலோ மட்டுமே பத்திரிகைகளில் ஒரு வரிச் செய்திக்குரியவராக விளங்கி வருகிறார்!

தன்னகங்காரம் கொண்ட டஜன்கணக்கான சோவியத் எழுத்தாளர்களும், அறிவுத் துறையினரும், விளம்பரம் தேடி, சுதந்திர உலகில் பல முறை தஞ்சம் புகுந்துள்ளனர். ஆரம்பகால விளம்பரத்திற்குப் பின்னர், அவர்கள் இருக்குமிடம் யாருக்கும் தெரிவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரதிருஷ்டவசமாக, இப்போது அக் கும்பலில் சல்ஜெனித்சினும் சேர்ந்துள்ளார். துர்ரதிஷ்டவசமாக என்று நான் குறிப்பிடுவதற்குக் காரணம், அவரது நாவலான 'இவான் தெனிசோவிச்சின் வாழ்வில் ஒருநாள்' என்ற நூலை நான் படித்து, அவரது இலக்கிய ஆற்றலையும், ஸ்டாலின் பெரிய அடக்கு முறையை அவர் ஏற்றுக் காட்டிய வீரத்தையும், அடக்கத்தையும் வியந்திருக்கிறேன். சோஷலிச நீதி தலையிட்டு, அவரையும், அவரைப் போன்ற ஆயிரக் கணக்கானோரையும் காவல் முகாம்களிலிருந்து விடுவிக்கும் வரை, அந்த வாழ்வைச் சகித்துக் கொண்ட சல்ஜெனித்சினை நான் மதிப்புடன் நோக்கியதுண்டு.

சோவியத் யூனியனுக்கு நான் பலமுறை விஜயம் செய்த போதும், சல்ஜெனித்சினைச் சந்திக்கும் ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால், அவரது நாவலை முதலில் வெளியிட்ட 'க்நாவிமிர்' பத்திரிகை ஆசிரியரான அற்புதக் கவிஞர் துவர் தோவ்ஸ்க்கியை நான் சந்தித்திருக்கிறேன். அதனை வெளியிடுவதற்கு சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் உயர் அதிகாரிகளே ஒப்புக் கொண்டனர் என்பதையும் நான் அறிவேன்.

ஆனால், சல்ஜெனித்சினது நேர்மையையும், அவரது இலக்கிய ஆற்றலையும் சோவியத் எதிர்ப்பு வட்டாரங்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, இறுதியில் அவரது கண்ணோட்டத்தையும், அவரது பார்வையையுமே, தங்களது சொந்த நோக்கங்களுக்காகத் திரித்துக் காட்ட முற்பட்டனர் என்று நான் கருதுகிறேன். ஏற்கெனவே காவல் முகாம்களிலும், தனிக் கொட்டடிகளிலும் நீண்ட காலத்தைக் கழித்ததன் பயனாக, உப்பி ஊதியிருந்த அவரது தன்னகங்காரத்தையும், ஆணவத்தையும். சோவியத் எதிர்ப்பு வட்டாரங்களின் அளவுக்கு மீறிய புகழ் மாலைகள் மேலும் உப்பிப் பெருக்க வைத்தன: அவரை சமூக விரோத, சோவியத் விரோதப் பாதையை மேற்கொள்ள வைப்பதற்கு அவர்கள் மேற்கொண்ட மிக நளினமான முயற்சிகளில் அவர்கள் வெற்றி பெற்று விட்டனர்.

சோவியத் எதிர்ப்பு வட்டாரங்களோ, நெடுங்காலம் துயரங்களுக்குள்ளானதால் நடுநிலை மனப்போக்கை இழந்து ஒருதலைப் பட்சமான கருத்துக்களை வெளியிட்ட அவருக்கு புகழாரங்களைச் சூட்டின; நோபல் பரிசை அவருக்கு அளித்தது உள்ளிட்ட இப்பெரும் புகழ் அவரை ஓரளவு கிறங்க வைத்ததன் காரணமாகவும், அவர் தனது நடுநிலையையும், திறந்த மனப்போக்கையும் இழந்தார்......... அதுவே அவரைத் தடந்தவறிச் செலுத்தியும் விட்டது.

சல்ஜெனித்சின், பிரதானமாக தனது சோவியத் எதிர்ப்புப் பதிப்பாளர்களுக்காகவே, சோவியத் நாட்டிற்கு வெளியேயுள்ள வாசகர்களுக்காகவே எழுதிக் கொண்டிருந்த காலம் வந்தது. தனது சொந்த மக்களிடம், தன்னைப் பிணைத்துள்ள தொடர்புகளையெல்லாம் அவரே துண்டித்துக் கொண்டு விட்டார். இது அவரது துன்பியல் வாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் ஒரு அத்தியாயம். தனது நூல்களும், எழுத்துக்களும் யுத்த வெறியர்களின் நலன்களுக்காகவும், சோவியத் யூனியனுக்கு மட்டுமன்றி, சமாதானத்திற்கே விரோதிகளாக இருப்பவர்களின் நலன்களுக்காகவும் தான் பயன்பட்டுள்ளன என்பதை என்றேனும் ஒருநாள் சல்ஜெனித்சின் உணருவார் என்று நான் நம்புகிறேன்.

என்னைப் பொறுத்தவரை, நான் சல்ஜெனித்சினை வெறுக்கவில்லை! அவரைப் பார்த்துப் பரிதாபப்படுகிறேன். அவர் ஒரு நல்ல எழுத்தாளர்; கொடிய கஷ்டங்களை அனுபவித்தவர்; அவர் பட்ட துயரங்கள் அவரை நடுநிலைப் பார்வையை மேற்கொள்ளும் திறனை இழக்க வைத்துவிட்டன; அவரைக் காப்பாற்றி, அவருக்கு ஆதரவு தந்த அமைப்பின் மீதும் நாட்டின் மீதுமே நன்றியற்றவராக அவரை ஆக்கிவிட்டன. சோவியத் அதிகாரிகள் அவரை நாடு கடத்துமாறு அவரே செய்துவிட்டார்; அதனை அவர் வலிந்து பெற்ருர். அது துன்பியல் நாடகத்தின் அடுத்த கட்டம். ஒருவேளை தானே அறியாமல், சமாதான விரோதிகள், சோவியத் விரோதிகளின் கரங்களில் ஒரு கருவியாக 'இவான் தெனிசோவிச்சின் வாழ்வில் ஒருநாள்' நாவலின் ஆசிரியர் பயன்படுகிருர் என்பதுதான் அந்தத் துன்பியலின் அளவுகோல்;

அறிவுத் திறனும், புலமையும் பெற்று விளங்கும் சல்ஜெனித்சினல், முதலாளித்துவ சமூகத்தின் அடிப்படை உண்மைகளைக் கூடத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இங்கு எவரும் மனிதப்பிறவிகளல்லர்; இங்கு எல்லோருமே, எப்படியோ புகழ் பெற்று விளங்குபவர்கள் உட்பட, பணம் தேடும் விளையாட்டுக்கு அடிமைகள்தாம் புகழுள்ளவர்களின் புகழ்கூட, பணம் தேடுவதற்கான கருவிதான். சல்ஜெனித்சின்பால் செய்தியாளர்களும், புகைப்பட நிபுணர்களும் காட்டும் ஈடுபாடு, அவரது சுதந்திரத்திற்காகவோ அல்லது அவரது தியாகத்திற்காகவோ அல்ல என்பதையும், பணம் குவிப்பதற்காக அவர்களது கருவிதான் அவர் என்பதையும் அவரே விரைவில் அறிந்து கொள்வார்.

ஜெர்மனியில் வந்திறங்கியவுடன், சல்ஜெனித்சின் அளித்துள்ள ஒரு பேட்டியில் சோவியத் யூனியனுக்கு என்ருவது ஒருநாள் திரும்பிச் செல்லும் சாத்தியக் கூறுபற்றிப் பேசியுள்ளார். தாங்களாகவே நாட்டை விட்டு வந்து 20 அல்லது 30 ஆண்டுகளுக்குப் பின்னர் தாய் நாட்டுக்குத் திரும்பியவர்களும் உள்ளனர். முதலாளித்துவ சமூக வாழ்வின் உண்மைகள், மிகக் கடுமையான ஆசிரியர்கள், எனவே தற்பெருமையும், தன்னகங்காரமும், ஆணவமும், சுயநல நோக்கும் கொண்டுள்ள சல்ஜெனித்சின் என்ருவது ஒருநாள் தனது தவறுகளை உணர்ந்து, சோஷலிசத் தாயகத்துக்குத் திரும்பிச் செல்லவும் கூடும். துன்பியல் நாடகத்தின் மூன்ருவது கட்டம் இப்போதுதானே தொடங்கியுள்ளது. என்ன நேரும் என்பதை யாரோ அறிவர்? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம்:
கிருஷன் சந்தர்

தமிழில்:
துரை. — சுப்பிரமணியன்

அவன் ஆஸ்பத்திரியால் வெளியேறி தள்ளாடியபடியே நடைபாதை ஓரமாக நடந்து வந்தான். அவனது கால்கள் நனைந்த பஞ்சைப்போல சோர்வுற்றன. மேலும் நடப்பதென்பது அவனுக்கு வேதனையாகவே இருந்தது. ஆதலால் நடைபாதை ஓரத்திலேயே படுத்துச் சிறிது நேரம் களைப்பாற வேண்டும் போல இருந்தது.

சொர்க்கம்

ஒரு

அவனுடைய நிலைமையைப் பார்த்தால் அவன் ஆஸ்பத்திரியில் இன்னும் ஒரு மாதம் இருந்திருக்க வேண்டும். ஆனால் இவனை ஆஸ்பத்திரியில் மேலும் வைத்திருக்க அவர்கள் தயாராக இல்லை. அவன் 'பிறைவற்' வாட்டில் நான்கு மாதங்களும் தொடர்ந்து இன்னும் ஒன்றரை மாதங்கள் 'பொது' வாட்டிலும் இருந்திருக்கின்றான். அவன் இந்த ஐந்தரை மாதங்களில் தனது 'கிட்னி'யில் ஒன்றையும் குடலில் சிறு பகுதியையும் பறிகொடுத்திருக்கின்றான். அவனுடைய குரல் இன்னமும் பழுதடைந்துதான் இருக்கின்றது. ஆனாலும் இவனிலும் பார்க்க இன்னும் மோசமான நிலையில் உள்ளவர்களுக்கு இடம் கொடுப்பதற்காகவே இவனை ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேற்றி விட்டார்கள்.

'இந்தா இந்த மருந்துக்களை எடுத்துக் குடி. நல்ல சத்துள்ள சாப்பாடாய் சாப்பிடு' என்று கூறி அனேக மருந்துகளை ஒரு கடதாசித் துண்டில் எழுதிக் கொடுத்தார் டாக்டர். மருந்துக் கடதாசியைக் கொடுத்துவிட்டு 'நீ ஒன்றுக்கும் பயப்பிடாதை, கெதியாய் குணமடைவாய், இங்கு அனேக நாட்கள் இனியும் தங்க வேண்டிய அவசியமில்லை' என்றும் அவனுக்கு உறுதி கூறினார்.

"ஆனால் டாக்டர் எனக்கென்டால் நல்ல சுகமில்லை... நடக்கக் கூட முடியாமல் இருக்கின்றது' அவன் கவலைதோய்ந்த முகத்தோடு சொன்னான்.

'நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம், அதெல்லாம் சரியாகிவிடும் .... வீட்டிற்குப் போய் நன்றாக ஆறுதல் எடுத்துக்கொள்...... வீட்டில் மனைவி கவனிப்பதைப் போல ஒன்றும் வராது...... நீ கெதியாகக் குணமடைவாய்.. .... மீண்டும் சொன்னார் டாக்டர்.

அவன் நடைபாதை ஓரத்திலே தட்டித் தடுமாறி நடக்கும்

குப்பை வாளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது 'தனக்கு வீடு எங்கிருக்கின்றது' என்று ஏங்கினான்.

'சிறிது காலத்திற்கு முன்பு தான் எனக்கு வீடு இருந்தது. வீடு மாத்திரமல்ல ஒரு குழந்தைக்கு அதுவும் முதற் குழந்தைக்குத் தாயாகப் போகும் மனைவி கூட இருந்தாள். அவர்களெல்லாம் இப்பொழுது எங்கே.........' அவன் தனக்குள்ளே முணுமுணுக்துக் கொண்டான்.

பிள்ளையின் நினைப்பு அவனுக்கு சந்தோசத்தைக் கொடுத்தது. அவன் அந்தப் பிள்ளை பிறக்கும் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு இந்த உலகத்தில் பிறக்கப்போகும் முதற் குழந்தை அது.

டுலாரி — அவனது மனைவி அழகான சின்னச் சின்ன சட்டைகளை அக்குழந்தைக்குத் தைத்தாள். அந்தச் சின்ன அழகான சட்டைகளைத் தனது கணவனுக்குக் காட்டுவதற்காக ஆஸ்பத்திரிக்குக் கூட கொண்டு சென்றாள். அந்தச் சட்டைகளை அவன் தொட்டுப் பார்த்து அதன் அழகில் மயங்கினான். அவனுக்குத் தன் குழந்தையைத் தொட்டுப் பார்ப்பது போல இருந்தது.

ஆனால் சில மாதங்களின் பின்பு எல்லாமேபோய்விட்டன. தனது கணவனின் முதலாவது 'கிட்னி' சத்திர சிகிச்சைக்குச் செலவு செய்வதற்கு தனது நகைகள் எல்லாவற்றையுமே டுலாரி விற்றுவிட்டாள். ஏதோ இப்படியான நிலைமைகளில் விற்பதற்குத்தான் நகைகள் செய்யப்பட்டவைபோல.

பெண்கள் தங்களை அழகுபடுத்தத்தான் நகைகள் வாங்குவதென்று மக்கள் நினைக்கின்றார்கள். ஆனால் உண்மையில் இவையெல்லாம் எதிர்பாராத செலவுகளுக்கும் கணவனின் சுகயீனத்திற்கும், பிள்ளைகளின் படிப்பு, கலியாணம் போன்றவற்றிற்குமே ஒதுக்கி வைக்கப் படுகின்றன. வீட்டுக்குப் பொறுப்பானவள் நகைப் பெட்டியை மாத்திரமே பாதுகாத்துக் கொள்கின்றாள்.

அவர்களுடைய கஷ்டங்களுக்கு மேலாக டுலாரியின் கணவனின் இரண்டாவது 'கிட்னி' சத்திரசிகிச்சை செய்வதற்கு முன்பாக டுலாரிக்குக் கருச்சிதைவு ஏற்பட்டது. அவள் அடைந்த கஷ்டத்திற்கும் அவள் கடக்கவேண்டியிருந்த கஷ்ட காலத்திற்கும் இது ஆச்சரியப் பட வேண்டிய ஒன்றல்ல.

டுலாரியின் மெல்லிய கயிறு போன்ற உடலமைப்பும் வெளிறிய மாநிறமும் அவள் பட்ட கஷ்டத்திற்கு ஈடு கொடுக்க முடியவில்லை எனவே அந்த நலிந்துபோன குடும்பத்திற்கு இந்தப் பிள்ளை இருந்தாலும் மேலும் கஷ்டமாகத்தான் இருக்கும். சில பிள்ளைகள் இந்த வழியில் அதிஷ்டமானதாகவே இருக்கின்றன.

அவளது கணவனின் இரண்டாவது 'கிட்னி' சத்திரசிகிச்சையோடு வேலையும் பறிபோய் விட்டது. அதுவும் அவனுக்கு மிகவும் தேவையான நேரத்தில் அது அப்படித்தான் நேர வேண்டி இருந்தது.

நீண்ட நாள் சுகயீனமும் வேலையும் ஒன்றுக் கொன்று ஒத்து வராதுதான். எந்த ஒரு வேலை கொடுப்பவனும் பொறுத்துக்கொள்ள மாட்டான். அவன், தனக்குக் கீழ் வேலை

செய்யும் ஒருவனின் சுகயீனத்தை அவனின் சொந்த விடயம் எனக் கருதுகின்றான். மனிதனையும் இயந்திரத்துக்கு அடுத்ததாகவே எண்ணிக் கொள்கின்றான். ஏனெனில், இயந்திரத்தை நீண்ட நேரம் 'சும்மா' இருக்க விடமுடியாது. அது உதவாமற்றுப் போகும்போது அதை நீக்கிவிட்டு புதியதை எடுத்துக் கொள்கின்றான். ஏனெனில் நேரத்தைப் போல வேலையையும் தாமதிக்க முடியாது. வியாபாரம் தாமதியாது வழக்கம் போல நடைபெற வேண்டும்.

வேலை இல்லாது போன செய்தி அவனுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. அது அவனுக்கு அவனது இரண்டாவது கிட்னியையும் அகற்றியதுபோல இருந்தது. அவனது நரம்புகளில் பயந்தான் ஓடிக்கொண்டிருந்ததே தவிர, இரத்தம் ஓடிக்கொண்டிருந்ததாக அவன் உணரவில்லை. அந்த இனந்தெரியாத பயம் அவனது நித்திரையையே கலைத்துவிட்டது.

நீண்ட நாள் சுகயீனத்திற்குச் செலவிற்காகக் கையில் பணமும் வேண்டும். பணம்தான் அற்றுப் போனதைவிட வீட்டிலிருந்த சாமான்களும் ஒவ்வொன்றாக அடைவு கடைக்குப் போகத்தொடங்கிற்று. எனவே டுலாரி வீட்டைக் கொண்டு நடத்துவதற்கு ஒரு கம்பனியில் வேலைக்குச் சேர்ந்தாள்.

ஒருநாள் அவள் தனது கணவனைப் பார்ப்பதற்கு தனது கம்பனி முதலாளியோடு வந்திருந்தாள். அந்த முதலாளி நடுத்தர வயதுடையவனாக கட்டையனாகவும் மெலிந்தும் காணப்பட்டான். அவன் கதைப்பது மிகவும் சொற்பம். ஆனால் சிரிப்பதோ மிகவும் அதிகமாக இருந்தது. அவனைப் பார்த்த பொழுது பழம் புத்தகங்கள் விற்பவனைப் போல தெரிந்ததே அல்லாமல் ஒரு பணக்கார முதலாளிபோலத் தெரியவில்லை.

டுலாரி அனேகம் படிக்காதபடியால் அவளைக் கடிதங்களுக்கு முத்திரை ஒட்டும் வேலை கொடுக்கப்பட்டுள்ளது.

'அது சந்தோஷமான வேலை......' டுலாரியின் கணவன் சொன்னான்.

'ஒரு நாளைக்கு அறுநூறு முத்திரை ஒட்டுவதனால் அப்படி இருக்காது.........' டுலாரியின் முதலாளி சொன்னான்.

'அது உண்மையில் களைப்புத்தரக்கூடிய வேலையே......... வேலை முடிந்ததும் நான் முற்றாகக் களைத்துப் போயிருப்பேன்' டுலாரி சொன்னாள்.

'சுகம் வந்தால் நீங்களே டுலாரியின் வேலையைச் செய்யலாம்' டுலாரியின் முதலாளி அவளின் கணவனைப் பார்த்துச் சொன்னான். சொல்லிவிட்டு அவன் போவதற்கு எழுந்தான். அவனோடு சேர்ந்து போவதற்கு அவளும் எழுந்தாள்.

அவளது நடையில் ஒரு துரிதத்தையும் அவளது மெல்லிய உடல் ஒரு பூக்கொம்பு அசைவதுபோல அசைவதையும் அவதானித்தான்.

அவள் கதவுக்குக் கிட்டச் சென்றபொழுது அவனே விழுந்தடித்துக் கொண்டு கதவை ஒரு கையால் திறந்தான். ஒருகை கதவைத் திறந்துகொண்டு மறுகை டுலாரியின் நாரியை வருடியது.

டுலாரியின் கணவன், முதலாளி விழுந்தடித்துக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவைத் திறந்ததைக் கண்டு பேசாது இருந்தான். ஆனால் டுலாரியின் நாரியைக் தடவிய கையைக் கண்டு ஆச்சரியப் பட்டான்.

அடிக்கடி இடதுகை செய்வதை வலது கைக்குத் தெரியாமல்தான் இருக்கும் என்று நினைத்துக்கொண்டு தனது தலையைத் தலையணையில் புதைத்து ஆறுதலாக அடுத்த 'குழுக் கோஸ்' ஊசிக்கு எப்போ என்று காத்துக் கொண்டிருந்தான்.

சிறிதுநாளைக்குப்பின் அவன் 'பொது' வாட்டுக்கு மாற்றப் பட்டான். அங்குதான் அவனுக்கு மூன்றாவது சத்திர சிகிச்சை நடைபெற்றது. அப்பொழுதுதான் அவனது மனைவி டுலாரி அவனது முதலாளியோடு சுற்றுலாவுக்குப் போயிருந்தாள்

என்னவென்றாலும் பொறுமைக்கும் எல்லை இருக்கின்றது. வாழ்வு மிகவும் குறுகியது. இளமையின் பூரிப்பு நீண்ட நாட்களுக்கு இருக்காது. ஒரு இளம் பெண்ணின் இதயத்தில் ஆவல் நிறைந்திருக்கும்போது, தேன் வண்டுகள் ரோசா மலரில் தேனுக்கு அமர்வதுபோல், தண்மதி அவளின் கண்களில் விழுந்து இதழ்களை முத்தமிடும் போது, அவளுடைய மெல்லிய கழுத்தில் யாரோ ஒருவன் முத்தமிடும் பொழுது அவனது மூச்சிலிருந்து பிறக்கும் வெம்மை வேண்டுமென்று ஆவலோடு காத்துக் கொண்டிருக்கும் பொழுது அவளால் எப்படி மூத்திரத்தின் நாற்றத்தையும், துப்பல், சளி, சிதல் முதலியவற்றையும் கண்டு சகிக்கமுடியும்.

சாவின் கதவுகளில் பட்டு எதிரொலிக்கும் ஒரு மனிதனின் முனகல் ஒலியை எப்படி அவள் கேட்பாள். இரண்டு வருடங்களுக்கு முன்புதான் திருமண வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த வயது நிரம்பாத ஒரு இளம் பெண் வாழ்க்கையில் கஷ்டமான பகுதியைத்தான் கண்டிருக்கின்றாள்.

வாழ்க்கையின் பிரகாசமான பகுதியைப் பற்றிக் கனவு காண்பவளைப் பற்றி ஏன் குற்றம் சொல்லவேண்டும். அவள் டார்ஜீலிங்குக்கு சுற்றுலாவுக்குப்போனதில் தப்பில்லைத்தான்.

இதற்காக அவன் கண்மூடித்தனமாக இருப்பதாக அவன் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டன. இதை நினைத்து அவனால் அழமுடியவில்லை. ஏன் பெருமூச்சுக்கூட விட முடியவில்லை. இரும்பை அடித்து தட்டையாக்கியது போல விதியின் பலமான அடிகள் அவனை மெலியவைத்தன. எனவே ஆஸ்பத்திரியிலிருந்து அவனை வெளியேறச் சொன்னபொழுது டாக்டரின் கட்டளைக்குப் பணிந்து சத்தமில்லாது வெளியேறினான்.

தனக்கு வீடு என்று ஒன்று இல்லை என்றோ அல்லது மனைவி என்று ஒருத்தி இல்லையென்றோ அல்லது வேலையும் தான் இல்லை என்றோ ஏன் முழுவதாக எதிர்காலமே தனக்கு இல்லை என்றோ அவன் டாக்டருக்குச் சொல்லவே இல்லை. அவன் சொன்னது இது ஒன்றுதான்.

'டாக்டர் ஐயா, என்னால் நடக்க முடியாது' அவன் உணர்ந்து கொண்ட உண்மை அது ஒன்றேதான். அவன் மெலிந்து, வாடி ஆட்டம் கண்ட பழைய தொட்டில் போல கூனிக்குறுகி இருந்தான்.

வானம் சாம்பல் நிற வர்ணத்தில் நிறம் காட்டி இருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. அவனைக் கடந்து செல்வோரின் பார்வை அவன்மீது சிதல்போல விழுந்து தெறித்தது. அவனுக்கு அந்த இடத்தைவிட்டு ஓடிவிட வேண்டும்போல இருந்தது. மின்சாரக் கம்பங்களைத் தாண்டி குறுக்கும் நெடுக்குமாக ஓடும் தெருக்களை விட்டு வெகு தொலைவுக்கு ஓட வேண்டும் என எண்ணினான். இதற்கிடையில் அவன் வெகு காலத்திற்கு முன்பு காலம் சென்ற தாயையும் தகப்பனையும் பற்றி நினைத்தான். பின்பு ஆபிரிக்காவில் வாழ்ந்த தனது சகோதரனைப் பற்றியும் நினைவு கூர்ந்தான்.

அப்பொழுது அவனைக் கடந்து ஒரு 'ட்ராம்கார் ஓடிக்கொண்டிருந்தது. தனது வீடு முன்பிருந்த இடத்தில் இப்பொழுது இருப்பது தெரிந்தும் ஆடி அசைந்து தள்ளாடிக்கொண்டு அந்த வீட்டைநோக்கி நடந்தான். முன்பு தினமும் நடந்த பழக்கம் அவனை அப்படி நடக்க உந்தியது.

திடீரென்று, அவனுக்கு ட்ராம் கார்களினதும், மோட்டார் வண்டிகளினதும் இரைச்சல் வர வர பெரிதாகக் கேட்டது. மின்சாரக் கம்பங்களின் தோற்றம் மங்களாகத் தெரிந்தது. அவனைச் சுற்றியிருந்த கட்டிடங்கள் பேரிரைச்சலோடு சாய்ந்து விழுவதுபோல அவன் உணர்ந்தான். பின்பு எல்லாம் இருளடைந்து தெரியவே, நிலத்தில் சாய்ந்து படுத்துக் கொண்டான்.

அவன் மூர்ச்சை தெளிந்து கண்விழித்தபோது இரவாகி சாதுவாகக் குளிராக இருந்தது. ஒன்றை ஒன்று பிரிக்கும் சுவர்களுக்கப்பாலுள்ள சாலை ஓரத்தில் படுத்திருந்தான். அந்தச் சுவர்களில் ஒன்று வடக்கிலிருந்து தெற்கேயும் மற்றையது கிழக்கிலிருந்து மேற்கேயுமாக கட்டப்பட்டிருந்தன. அந்த அரைமட்டச் சுவர்களின் பின்னே மூங்கில் மரங்களையும் கொய்யா மரங்களையும் மற்றும் சிறு பூஞ்செடிகளையும் கண்டான். அதற்கப்பாலுள்ளதை அவனால் பார்க்க முடியவில்லை. மற்றப் பக்கத்தில் ஒரு மூன்றுமாடிக் கட்டிடத்தின் பின்பகுதி தெரிந்தது. ஒவ்வொரு மாடியிலும் ஒவ்வொரு பெரிய யன்னல் தள்ளிக் கொண்டு இருந்தது. அதோடு ஆறு இரும்புக் குழாய்களும் மேலிருந்து கீழாக அந்த மாடியில் பொருத்தப்பட்டிருந்தது.

எங்கோ மூன்று மணி அடித்துக் கேட்டது. ஒரு மெலிந்த தலையணையில் படுத்துறங்குவது போல அவன் தனது முழங்கைகளை ஊன்றி கைகளில் படுத்துக்கொண்டு கண்களைத் சிறிது மூடினான்.

அவனால் அதிக நேரம் தன்னை ஏமாற்ற முடியவில்லை. அவனுக்குப் பசி வந்தது. சிறிது நேரத்தின் பின் ஏதோ ஒரு வாசனை மூக்குத் துவாரங்களைத் துளைத்தது. அந்த வாசனையை அவனால் ரகம் பிடிக்க முடிந்தது. நெய்யில் பொரித்த பூரி. உள்ளி வெண்காயம் சேர்த்துச் சமைத்த உருண்டைக் கறி, பழுத்து அழுகிய தக்காளிப்பழங்கள், கொய்யாப்பழங்கள், மூங்கில் செடிகளினிடையே இருந்து வந்த மூத்திரத்தினதும் சேற்றினதும் நாற்றங்கள்.

அவன் அதிக நேரத்தை அதில் செலவு செய்யவில்லை. பூரியின் வாசனை எங்கிருந்து வந்ததோ அந்தத் திசையை நோக்கித் தன்னை இழுத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றுன். அந்த இடத்தை அடைந்ததும் இருட்டில் சுழன்று அங்கும் இங்கும் பார்த்தான். கடைசியாக ஒரு பெரிய இரும்புத் தொட்டியில் அவனது பார்வை படிந்தது. இந்த இரும்புத் தொட்டி சற்றுத் தள்ளி மூன்றடுக்கு மாடியின் பின்புறத்திற்கும் கான் பைப்பிற்கும் இடையே இருந்தது. அது நாற்றமடைந்த கழிவுப் பொருட்கள் வீசப்படும் ஒரு வாளியைப்

மல்லிகை விற்பனையாளர்

கொழும்பில்

★ ராசேஸ்வரி ஹோட்டல்
69, நோறிஸ் வீதி.

★ மலர்விழி
கதிரேசன் வீதி.

★ லீலாசலூன்
கதிரேசன் வீதி.

திருகோணமலை

வி. எஸ், சிதம்பரப்பிள்ளை
43, பிரதானவீதி.

கல்முனை

மணமகள் புத்தகசாலை
பிரதான வீதி.

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு விற்பனையாளர் தேவை.

போல இருந்தது. அது கிட்டத்தட்ட முப்பது அடி நீளமும் பதினைந்து அடி அகலமும் உடையதாக இருந்தது. அந்தக் குப்பை வாளி கழிவுப் பொருட்களால் நிரம்பி வழிந்தது.

பழைய அழுகிய பழங்களின் தோல்கள், பழைய பாண்துண்டுகள், தேயிலை மண்டி, பழைய உக்கிய பேப்பர் துண்டுகள், கிழிந்த புத்தகங்கள், தகரத் துண்டுகள், உடைந்து போன பிளாஸ்ரிக் விளையாட்டுச் சாமான்கள், கறள் பிடித்த குளாய்த் துண்டுகள், சாப்பிட்டு மீதியான பூரிகள், உருளைக் கிழங்குக் கறிபட்ட வாழை இலைகள் முதலியன கிடந்தன.

அவனுக்குக் கொடும் பசியாக இருந்தது. ஆனாலும் அந்த நாற்றத்தை சகிக்க முடியாது பின்வாங்கினுன். ஆனாலும் உருளைக் கிழங்குக் கறியின் வாசனை மற்ற நாற்றங்களை உறிஞ்சி எடுத்தது. இறுதியாக மரியாதையையும் பார்க்காது வாழை இலையை எடுத்தான். அவனை 'மிருகபசி' ஆட்கொண்டதினுல் அந்தப் பூரியை 'அவக் அவக்' கென்று சாப்பிட்டான். பூரியைச் சாப்பிட்டு முடித்ததும் வாழை இலையை நக்கினுன். நக்கித் துப்புரவாக்கிவிட்டு கை விரல் நகத்திற்குள் அமிழ்ந்து கிடந்த பூரித் துண்டுகளையும் தேடித் தேடிச் சூப்பினுன். ஆனாலும் பசி அடங்கவில்லை. அவன் மீண்டும் அந்தக் குப்பை வாளியைக் கிண்டிக் கிளறி ஒரு இலையை எடுத்தான். அதில் அழுகிய தக்காளிப் பழம் கிடந்தது. அதையும் அவன் சாப்பிட்டான். அவனுக்குக் களையாக இருந்தது. மெதுவாக அந்த குப்பை வாளிக்கருகில் படுத்து உறங்கினுன். அப்படி மோன நிலையில் இரண்டு நாட்கள் கிடந்தான். பசி வரும்போது அந்தக் குப்பை வாளியைக் கிளறி ஏதாவது எடுத்துச் சாப்பிடுவான். நாற்றம் தாங்க முடியாதகென்றுல் விட்டு விடுவான். விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு நடைபாதையின் ஓரத்தில் படுத்து உறங்குவான்.

இரண்டு வாரங்களின் பின் அவனது தேகத்தில் ஒருவாறு உசார் வந்தது. இப்பொழுது அவன் தேக நிலைக்கேற்ப தன்னை ஏற்படுத்திக் கொண்டான். அவனுக்கு அந்தச் சூழ்நிலை நன்ருகப் பிடித்திருந்தது. மர நிழலின் கீழ் படுத்து உறங்குவான். அந்த மர நிழலின் கீழ் நல்ல குளிர்மையாக இருக்கும்.

அந்த நடைபாதை அனேகமாக ஒரு நாளின் முக்காற்பகுதி நேரம் சன சந்தடி அற்றுக் கிடக்கும். ஒரு நாளைக்கு ஒரு தடவைமட்டும் அதே மாடி வீட்டின் பின்பக்க யன்னல் திறபட்டு சில குப்பை கூழங்கள் 'தொப்' பென்று வந்து அந்த குப்பை வாளிக்குள் விழும், அந்தக் குப்பை, கூழம்தான் அவனது வாழ்வு— அவனது ஜீவன்.

மாதங்கள் உருண்டு வருடங்களாகின. பருவ காலங்களுக்கு ஈடு கொடுத்து நிற்கும் மரக் கம்பத்தைப் போல அல்லது ஒரு புராதன கட்டிடத்தைப் போல அவனும் அந்த இடத்தில் ஒரு நிரந்தரப் பிறவியாகி விட்டான். அந்த இடத்தின் காட்சிகளில் அவனும் ஒன்ருக மாறிவிட்டான்.

அங்கு உள்ளவர்கள் அவனை 'கச்சரா பாபா' என்று கூப்பிடுவார்கள். சாப்பாட்டுக் கடைக்கு வருபவர்கள் மிகுதியை அவனுக்காக அந்தக் குப்பைவாளிக்குள் போட்டு விட்டுப் போவார்கள்.

மாடி வீட்டு யன்னலிலிருந்து சில சமயங்களில் ஏதாவது சாப்பிடக்கூடிய சாமான்களை எறிவார்கள். இறைச்சித் துண்டு, பூரி, சமைத்த மரக்கறி, சூப்பிவிட்டு எறிந்த மாம்பழம், பால்சோறு கொண்ட வாழையிலை இவை எல்லாவற்றையும் அவன் அந்த குப்பை வாளிக்குள்ளேயே எடுத்தான். சில சமமங்களில் கிழிந்த அல்லது வேண்டாமென்று ஒதுக்கி விடப்பட்ட பீஜாமா, காற் சட்டை, சேட் முதலியனவும் அந்தக் குப்பை வாளிக்குள்ளேயே இருந்து எடுப்பான்.

நல்லனவெல்லாம் இந்த உலகத்திலிருந்து போகக்கூடும். அதேபோல் எந்தச் சினேகிதமும் மறையக்கூடும். ஆனல் குப்பைகள் இந்த உலகத்தை விட்டு ஒருபோதும் போகாதென்று அவனுக்குத் தெரியும். அது அழியாவரம் பெற்றதென அவனுக்குப் பட்டது.

உலகத்திற்கெதிராகத் தனது முகத்தைத் தனது எண்ணத்தின்படி வாழ கற்றுக் கொண்டான்.

தன்னுடைய குட்டி உலகத்திற்கப்பால் ஒரு பெரிய உலகமே இருக்கின்றதென்பது அவனுக்குத் தெரியாததல்ல. சீனிக்குத் தட்டுப்பாடு வரும்பொழுது ஒரு இனிப்புப் பண்டமும் அவனது குப்பை வாளிக்குள் விழுந்தது கிடையாது. மாவிற்குத் தட்டுப்பாடு வந்ததும் மாவினுல் செய்த பண்டங்கள் எதுவும் அந்த வாளிக்குள் விழுந்ததில்லை. வாளிக்குள் இருக்கும் குறைச் சிகரெட்டை எடுத்துப் பார்த்தால் அது மிகவும் சிறியதாக இருக்கும். அதனுல் சிகரெட்டின் விலை ஏறி இருப்பதாக அவன் அறிவான்.

அவன் கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடங்களை அந்தக் குப்பைவாளிக்கருகில் களித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டான். பகலும் இரவும் அவனது தலைக்குமேல் அடித்துச் செல்லப்படும் காற்றைப்போல் கழிந்து சென்றன.

அவனது தலைமயிர் நீண்டு வளர்ந்து முதுகில் ஆலம் விழுதுகள் போல அவனது தோளில் தொங்கின. அவனது தாடி நரைத்து சாம்பல் நிறமாகியது. அவன் கறுத்து மண்நிறமாக இருந்தான். கிழிந்த கந்தல் உடையில், நீண்ட தலைமுடியோடு நாற்றம் எடுக்கும் உடம்போடு ஒரு நடமாடும் குப்பை வாளியாகவே அவன் காணப்பட்டான். அந்த நடமாடும் குப்பைவாளி தன்னோடு மாத்திரம்தான் கதைக்கும். சில சமயங்களில் மற்றைய குப்பைவாளியோடும் கதைக்கும்.

இவன் குப்பைவாளியோடு கதைப்பதைப் பார்க்கும்போது மக்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால் அவர்கள் ஏன் ஆச்சரியமடைகிறார்கள் என்று தான் அவனுக்கு விளங்காமல் இருந்தது.

அவன் தனது சிறியகாலத்தில் மனிதன் மனிதனோடு கதைத்ததைக் காணவில்லை. அவன் மனிதனும் அவனது சுயநலமும் கதைத்ததையே கண்டுள்ளான்.

ஏன், இரு நண்பர்களுக்கிடையில் நடக்கும் சம்பாஷனை கூட தங்களுடைய குறிப்பிட்ட சொந்த நலன்களின் சூழ்ச்சியை மூடிமறைக்கும் பெரியதோர் நிகழ்ச்சி போன்றதாகும்.

அவனுக்கு இந்த உலகமே பெரியதோர் குப்பைக் குவியல் போலவும் அதைச்சுற்றி மனிதர்கள் வீறு நடை போட்டுக் கொண்டு குப்பைகளைக் கிளறி ஏதாவது சிறிது லாபம் தேடும் சந்தர்பத்தை எதிர்ப்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

இந்த நினைவு அவனை ஒரு தடவை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

ஒருநாள் இரவு அவன் குப்பைவாளிக் கப்பாலுள்ள சுவரோடு சாய்ந்து கொண்டிருந்தான். அவனைச் சுற்றி அவனது கிழிந்த உடுப்புகள் அங்கும் இங்கும் சிதறிக் கிடந்தன. அந்தக் குப்பை வாளிக்குள்ளிருந்து அவனுக்கு ஒரு மெல்லிய அழுகுரல் அந்த இரவைக் கிழித்துக் கொண்டு மிகத் தெளிவாகக் கேட்டது. உடனே அவன் தனது கிழிந்த உடுப்புகளை அப்பால் எறிந்துவிட்டு அந்த மெல்லிய அழுகுரல் வந்த திசையை நோக்கி ஓடினான். அந்த இருட்டில் ஓடிச்சென்று குப்பைவாளியைக் கிளறித் தேடினான். தேடியபொழுது அவனது கை ஒரு சதைக் கும்பலில் முட்டியது. அப்பொழுது இன்னொருதடவை அந்த மெல்லிய அழுகுரல் கேட்டது.

அப்பொழுது பழைய பாண் துண்டுகளுக்கும், சூப்பிவிட்டு எறிந்த எலும்புத் துண்டுகளுக்கும், உடைந்த மதுபான போத்தலுக்கும், கைவிடப்பட்ட பழைய சப்பாத்துகளுக்கும் நடுவே பிறந்த மேனியோடு ஒரு குழந்தை கிடந்தது.

சிறிது நேரம் அவன் அந்தக் குழந்தையை உற்றுப் பார்த்தான். மனிதாபிமானத்தின் சின்னமான அந்தக் குழந்தை தனது சுவாசப் பையில் உள்ள மூச்சு அத்தனையையும் ஒருங்கே சேர்த்து கதறி அழுது, இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திற்குத் தனது வருகையைக் காட்டியது. உடனே அந்தக் குழந்தையை அள்ளி எடுத்து மார்போடு அணைத்து தனது கந்தைத் துணியால் அந்தக் குழந்தையைப் போர்த்துக் கொண்டான். ஆனால் குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. அது புதிதாக இந்த உலகத்திற்கு வந்ததால் பாலூட்ட வேண்டுமென்றே அடம் பிடித்தது. அவனுக்குக் குழந்தையின் அழுகை எப்படித் தணிப்பதென்றே தெரியவில்லை. அவனிடம் பாலோ அல்லது இறப்பர் போச்சியோ கிடையாது. அவனுக்கு ஓராட்டவோ தெரியாது. எனவே, அவன் சிறிது கலவரமடைந்தவனாய் குழந்தையைக் கிடத்திவிட்டு பால் எங்கே கிடைக்குமென யோசித்தான். அப்போழுது அந்தக் குப்பை வாளிக்குள் சூப்பிவிட்டு எறிந்த மாம்பழமொன்று கிடந்தது. ஒன்றும் செய்வதறியாது அந்த மாம்பழத்தை எடுத்து குழந்தையின் வாயிற்குள் வைத்தான். வாயிற்குள் வைத்ததும் குழந்தை அப்படியே அயர்ந்து அவனின் கைகளில் நித்திரை தூங்கி விட்டது.

மாம்பழம் வழுகி நிலத்தில் விழுந்தது. ஆனாலும் குழந்தை இப்பொழுதும் நித்திரையாகவே இருந்தது.

அப்பொழுது அலனுக்கு அந்தக் குழந்தையை அப்படியே விட்டுவிட்டு இருட்டோடு இருட்டாக மறைந்தால் என்ன என்ற எண்ணம் வந்தது. உடனே கைகளை மெல்லத் தளர்த்தினான். ஆனால் அந்தப் பிஞ்சுக் குழந்தை கைகளை இறுகப் பற்றிக்கொண்டது. அவனுக்கு ஓர் புதுஉணர்வு பிறந்ததுபோல இருந்தது.

உடனே அவன் தனது மனைவி டுலாரியையும், அவளது வயிற்றில் வளர்ந்து பின் அழிந்த சிசுவைப்பற்றியும் ஒருகணம் எண்ணினான். அவனது கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

அவனுக்குக் கடந்தகால நினைவுகள் ஒவ்வொன்றாய் வந்தன. கண்களிலிருந்து வடிந்த கண்ணீர் கடந்த இருபத்தைந்து வருடங்களாக அவனது சரீரத்தில் ஒட்டியிருந்த அழுக்கையும் தூசிகளையும் கழுவியதன் பின் மறுபடியும் தன்னை ஒரு மனிதனாக்கிவிடுமோ என ஒரு உணர்வு அவனுக்கு வந்தது.

குழந்தை கையில் படுத்துறங்க அன்று இரவு முழுவதும் நித்திரை இல்லாது குழந்தையைத் தூக்கிக்கொண்டு நடைபாதை ஓரத்தில் அங்கும் இங்குமாய் ஓய்வின்றி அலைந்து திரிந்தான்.

அடுத்த நாள் விடிந்ததும் இந்தக் குப்பை வாண்க்காரனை அந்தக் குப்பைவாளிக்கருகில் ஒருவரும் காணவில்லை.

எல்லோரும் வியப்படையும்படி மிகவும் விரைவாகக் கட்டி எழுப்பப்படும் கட்டிடமொன்றுக்குத் தலையில் கல் சுமந்தபடி வீதியின் குறுக்கே நின்றான்.

அந்தக் கட்டிடத்தினருகே நிற்கும் ஒரு பெரிய மரநிழலின் கீழ் அந்தக்குழந்தை பூச்சேலையால் மூடப்பட்டுக் கிடத்தியிருந்தது.

அந்தக் குழந்தை தனது வயிறுர றப்பர் போச்சியில் ஏதோ உறிஞ்சிக் கொண்டிருந்தது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளனும் மக்களும்

செர்கி மிக்காய்ல்கோவ்

சோவியத் வாழ்வில் ஏற்பட்டுள்ள துரித மாற்றங்களை, இன்றைய காலகட்டத்தில் வாழ்ந்து வருபவர்கள், தெளிவாகக் காண இயலாத வண்ணம் அவர்கள் வாழ்வுடன் அத்துணை நெருங்கியுள்ளனர்; எனினும் எதிர்காலத்தில் உள்ள மக்கள் நமது நூல்களின் பக்கங்களைப் புரட்டினால், அவர்கள் அவற்றை நன்கு அறிந்துகொள்ளக் கூடும்.

புதியதொரு சமூகத்தைக் கட்டுவதற்குத் தேவையான தன்மைகளை மனிதனுக்கு ஊட்டவும், மனித மனத்தையே சிறப்புற உருவாக்குவதிலும், ஒரு புதிய வகையைச் சேர்ந்த சோவியத் எழுத்தாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

புரட்சிக்கு முன்னரும்கூட, ரஷ்ய இலக்கியம் பல முற்போக்குச் சிந்தனையுள்ள எழுத்தாளர்களை உருவாக்கியுள்ளது; ஆனால் சோவியத் ஆட்சிக் காலத்தில் தான் சமூக நடவடிக்கைகள் அனைத்தும் ஓர் எழுத்தாளனின் வாழ்வுடன் இணைந்த அம்சங்களாக ஆகியுள்ளன.

சோஷலிச சமூகத்தில் ஓர் எழுத்தாளனின் பங்கும், இடமும் என்ன என்பதை முதன் முதலில் எங்களுக்குப் புரிய வைத்தவர் மார்க்ஸிம் கார்க்கி தான். இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கு அவர் அதிக நேரத்தை செலவிட்டார். பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். அதன் பயனாக பல எழுத்தாளர்கள் புகழ்பெற்றவர்களாயினர். இன்று, திறமையைப் பேணிப் போற்றி வளர்க்கும் பண்பு, எங்களது எழுத்தாளருலகின் ஒரு விதியாக இருந்து வருகிறது.

ரஷ்ய சமஷ்டி எழுத்தாளர் யூனியன், அடிக்கடி இளம் எழுத்தாளர்கள் மாநாடு கூட்டி, அவர்களது படைப்புக்களை விவாதிக்கிறது.

சோவியத் எழுத்தாளர்கள் தோழமைப் பண்பு மிக்கவர்கள்; அவர்கள் தங்களைப் போன்றே தான் பிறரும் எழுத வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்கள் அல்லர் என்ற போதும், ஒருவருக்கொருவர் தங்களால் முடிந்த அளவு உதவுகின்றனர். இலக்கியக் கோட்பாடுகளின் ஒரே நீதிபதிகள் தாங்கள்தாம் என்ற மமதை ஏதுமின்றி, நட்புறவுடன் கூடிய ஆலோசனைகளையும், மதிப்பீடுகளையும், இளம் எழுத்தாளர்களுக்கு நல்குவதுடன், எந்த இலக்கியப் போக்கையும் நடுநிலையுடன் விமர்சிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது படைப்புக்களைப் பிறர் விமர்சிப்பதை விரும்பாத எந்த சோவியத் எழுத்தாளரையும் நீங்கள் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாது. எந்த எழுத்தாளரது அபிப்பிராயங்களும், அச்சிடப்பட்டால் அவற்றைப் பற்றிப் பிறர் கருத்துத் தெரிவிக்காதிருப்பதில்லை; அவற்றைக் குறித்து எழுத்தாளர்கள் தகுந்த முடிவுகளை வரையறுக்கின்றனர். குழந்தை எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள், நாவலாசிரியர்கள் ஆகிய தனித் தனி ஆசிரியர்களது கூட்டங்களும், மாநாடுகளும் அடிக்கடி நடத்தப்படுவதன் நோக்கம் அதுவே.

சோவியத் நாட்டில், ஒரு எழுத்தாளர் எழுதும் ஒவ்வொரு கருத்தும், ஒவ்வொரு வார்த்தையும் அவர் மீது மிகப் பெரும் பொறுப்பைச் சுமத்துகிறது. அது குறித்து வாசகர்களின் தீர்ப்பைப்பெறுவதிலிருந்து அவர் தப்ப முடியாது. சோவியத் எழுத்தாளர்களது தன்மையை நிர்ணயிப்பது அதுதான்; அதாவது, வாசகர்களுடனும், மக்களுடனும் அவருக்குள்ள உறவுகளேயாகும்.

சோவியத் இலக்கியம் ஒரு மக்கள் இலக்கியமாகும். அவ்வாறு நான் கூறும்போது, அவை பல லட்சம் பிரதிகள் அச்சிடப்பட்டு வெளியாவதை மட்டுமே குறிப்பிடவில்லை; அநேகமாக எல்லா எழுத்தாளர்களுமே ஒரு குறுகிய வாசகர் வட்டத்திற்கோ அல்லது இலக்கிய ரசனை வட்டத்திற்கோ மட்டுமே எழுதாமல் எல்லா வகையான வாசகர்களுக்கென்றும் எழுதுகின்றனர். தேசிய நலன்களின் மட்டத்திற்கு நெடிதுயர்ந்து நிற்கும் நூல்கள் தாம் வரலாற்றில் நீடித்து வாழக் கூடியவை.

தனது நூல் சமூகத்திற்கு எவ்விதத்தில் பலனளிக்கும், எந்த அளவுக்கு வாசகர்களிடையே நூல்களின்பால் ஈடுபாட்டை அதிகரிக்கும், நாட்டில் எழுத்தாளருக்கும், வாசகருக்கும் இடையே தோன்றியுள்ள புதிய உறவுகளை எத்தனை அளவு ஊக்குவிக்கும் என்பது குறித்தே ஒரு நல்ல எழுத்தாளர் சிந்திக்கிறார். பொது நூலகங்களிலும், பண்ணைகளிலும், சிறிய சங்கங்களிலும்கூட நடைபெறும் விவாதங்களில், புகழ்பெற்ற பெரிய எழுத்தாளர்களும் பங்கு கொள்வது, சோவியத் யூனியனில் சர்வசாதாரனமே.

சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்யும் பல அயல் நாட்டு எழுத்தாளர்கள், இது கண்டு தங்களது வியப்பைத் தெரிவித்துள்ளனர். ஏனெனில் மேலைய சமூகத்தில் நூல் வெளியீடு என்பது, சில கண்ணியமான விதிவிலக்குகள் நீங்கலாக-முற்றிலும் மாறுபட்ட ஒரு தொழிலேயாகும்.

மேலை நாடுகளில் நூல் என்பது ஒரு விற்பனைப் பண்டம்; குளிர்பதனப் பெட்டியையும், சவரக் கத்தியையும் போன்றே அது ஒரு சந்தைச் சரக்கு: தனது சரக்கு எந்த அளவுக்கு விற்பனையாகும் என்பதே ஒரு பிரசுரகர்த்தாவின் பிரதான கவலையாகும்: அந்த விற்பனையிலிருந்து தாம் அடையும் லாபம் எவ்வளவு என்பதே அவரது சிந்தனையாகும். அதனால்தான் முதலாளித்துவப் புத்தகச் சந்தையில் ஒரே மாதிரியான 'கிளுகிளுப்பூட்டும்' அல்லது 'திகில்டையச் செய்யும்' உள்ளடக்கத்தைக் கொண்ட நூல்கள் பெருகியுள்ளன.

சோவியத் யூனியன் எழுத்தாளர்களை 'மூளைச் சலவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிறது என்று சோவியத் எதிர்ப்பாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்; ஆனால், மேலைய சமூகத்தில் நிலவும் புத்தகச் சந்தை நிலைகள் தோற்றுவிக்கும் நிர்ப்பந்தம்தான் மிகத் கீழ்த்தரமான மூளைச் சலவைக் கருவியாகும். இலக்கிய நூல்கள் குறித்த விவாதங்கள் ஆயிரக் கணக்கான பொதுமக்களைக் கவர்ந்திழுக்கும் கூட்டங்கள் சோவியத் சமூகத்தில் நடைபெறுகின்றன; ஆனால், முதலாளித்துவ நாடுகளில் எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்குமிடையே நிலையான உறவுகள் எதும் கிடையாது.

மாஸ்கோ எழுத்தாளர்கள் சென்ற ஆண்டு மட்டுமே 18000 முறை தமது வாசகர்களைச் சந்தித்துள்ளனர். நாடு முழுவதிலும் அவர்கள் பயணம் செய்கின்றனர். காகசஸிலுள்ள எழுத்தாளர்கள் மாஸ்கோவுக்கும், மாஸ்கோ எழுத்தாளர்கள் கிஷினேவுக்கும், பாக்கூவுக்கும் பயணம் செய்கின்றனர்.

எந்த ஒரு 'தேசிய' இலக்கியமும், பிற இலக்கியங்களை விட உயர்ந்தது என்று கருதப்படுவதில்லை. அனைத்தும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து, ஒன்றை மற்றொன்று வளப்படுத்துகிறது. எழுத்தாளர்கள் 'பொது மக்களுக்கு அறிவூட்டுவதில்லை' அதற்குப் பதிலாக, பொதுமக்கள் எழுத்தாளர்களை வளர்ச்சியடையச் செய்கின்றனர்.

மக்களுடனும், அவர்களது பிரச்சினைகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதனால், எழுத்தாளர்கள் வாழ்க்கை பற்றியும், அதன் பிரச்சினைகள் பற்றியும் நன்கு அறிந்துள்ளனர். படைப்பாற்றல் பணியும், சமூக இயலும் ஒன்றாக இணைந்துள்ளது.

சோவியத் எழுத்தாளன், தனது வாழ்வுக் காலத்தை எடுத்துரைக்கும் வரலாற்றாளனும் ஆவான். அதனால்தான், யுத்தகால நிகழ்ச்சிகளையும், சம்பவங்களையும் அன்று இலக்கியங்களாகப் படைத்துக் கொண்டிருந்த எழுத்தாளர்கள், இன்று தொழில்துறையையும், விவசாயத்துறையையும், கல்வி, குடும்பம், இயற்கைப் பாதுகாப்பு என்ற பல துறைகளையும் பற்றி இலக்கியம் படைத்துக் கொண்டுள்ளனர்.

போரிஸ் பொலிவாய், ஆண்ட்ரி சாக்கோவ்ஸ்க்கி ஆகிய புகழ்பெற்ற எழுத்தாளர்கள், அன்றாட அரசியல், சமூக வளர்ச்சிப் போக்குகளுடன் நெருங்கிய தொடர்புடையவர்களேயாவர்.

பிரபல எழுத்தாளரான நிக்கோலாய், திக்கனேவ், சுப்ரீம் சோவியத்தின் இறுப்பினரும், சோவியத் சமாதான கமிட்டியின் தீவிர ஊழியரும் ஆவார். அதே போன்று மிக்காய்ல் ஷோலகோவ் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். பல எழுத்தாளர்களும், தேசிய அல்லது குடியரசு, அல்லது ஸ்தல நிர்வாகங்களில் பங்கு பெறும் பிரதிநிதிகளாக உள்ளனர்.

இதற்கான ஒரே ஒரு எளிய விளக்கம் இதுதான்: எங்கள் நாட்டு எழுத்தாளர்களை, கம்யூனிசத்தின் சிற்பிகளாக மக்கள் காண்கின்றனர்; தங்களைச் சிறந்த முறையில் பிரதிநிதித்துவப் படுத்தும் பிரஜைகள் என்ற கருத்துடன்தான் அவர்களை அரசாங்க, ஸ்தல நிர்வாகங்களுக்குத் தேர்ந்தெடுக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு கோடுகள்

சாந்தன்

பஸ் போகிறவேகம், மூர்த்திக்கு மிகவும் பிடித்திருந்தது. கல்கிசையிற் புறப்பட்டு, காலி வீதியூடாக பம்பலப்பிட்டிவரை வந்து திரும்பி, கறுவாக்காடு, கும்பனித் தெருவெல்லாம் ஊடறுத்து, கோட்டையில் மிதந்து, புறக்கோட்டையைத் தாண்டி, மருதானைக்குள் நுழைந்து விட்டிருந்த அந்த ஒற்றைத்தட்டு 'இ சு சு', அங்கொடைக்குப் போயாக வேண்டும். இன்னுந் தாண்டிப் போக எத்தனையோ இடங்கள்... ...

சாரதிக்கு என்ன அவதியோ அந்த வேகத்துக்கு!

— அதுதான் இவனுக்குப் பிடித்திருந்தது.

கோட்டையிற்தான் ஏறியிருந்தான் மூர்த்தி. கிராண்ட்பாசுக்குப் போகவேண்டும். இரவு மெயிலில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த அசதி, ஆளை வதைத்துக் கொண்டிருந்தது. அலுவலகத்தில் அரைநாள் லீவு போட்டு விட்டுப் புறப்பட்டவன் பஸ் தரிப்பில் முப்பது நிமிடம் தவங்கிடக்க நேரிட்டது. நேரத்துக்குப் போனால் நிம்மதியாக கட்டிலில் சாயலாம். 'எவ்வளவு வேளைக்குப் போகிறனோ அவ்வளவுக்கு நல்லது!'

வேகமே நினைவாக - செயலாக - இயங்கிக் கொண்டிருந்த சாரதிக்கு, சுதந்திரம் குறைவு என்பது, அவன் அடிக்கடி போட்ட திடீர் 'பிரேக்' குகளிலிருந்து புரிந்தது. ஒவ்வொரு குலுக்கலிலும் முன்னால் - பிறகு பின்னால்- நிற்பவர்களிலெல்லாம் முட்டி மோதித் தொங்கி துவைந்து கொண்டிருந்தது. பிரயாணிகள் கும்பல் திருப்பங்களிலும் 'ஓவர்டேக்' குகளின் போதும், இதே நினைவுகள் பக்கவாட்டில் நிகழ்ந்தேறின. நெரிசல்களை ரசிப்பவர்கள், இந்தக் குலுக்கல்களை வலுவாக அநுபவித்துக் கொண்டிருந்தனர்.

தொழில் நுட்பக் கல்லூரி நிறுத்தத்தில் நின்று புறப்பட்டதும் கூட்டம் சற்றுக் குறைந்தது போலிருந்தது. கும்பலில் பிதுங்காமல் தப்ப மிதிப்படிகளிற் தொங்கிக் கொண்டு நின்ற கொண்டக்டர், சற்று ஆறுதலாக மேலேறி நின்று கொண்டான். மூர்த்தி இருந்தது கடைசி வரிசை. இவனுக்கு முன்னால்-வாசலை ஒட்டி - கொண்டக்டர் வந்து நின்றான். வலு 'ஸ்டை' லான இளவட்டம். தன்னை ஆசுவாசப் படுத்தவோ, அலங்கரிக்கவோ, கைக்குட்டையில் முகத்தை அடிக்கடி ஒற்றிக் கொண்டான்.

சுருதி பேதம் மாறிய இயந்திர ஒலியோடு இணைந்த ஒரு உலாஞ்சல். சாரதி 'கியர்' மாற்றி வண்டியை வெட்டி எடுத்திருக்க வேண்டும். தொட்டிலாக ஆடிய பஸ்ஸின் வாசல் வழியே பிடிதளர்ந்து நிலை தடுமாறிய கொண்டக்டர் வெளியே தூக்கியெறியப்படுவது மூர்த்தியின் கண்ணிற் பட்டபோது, மிகவும் பிந்தி விட்டது.

அநேகமாக எல்லோருடைய கண்களிலும் இது பட்டிருக்கும் போலிருக்கிறது. ஆளுக்காள் பட்டவரை சமயோசிதமாக ஒவ்வொரு வேலை செய்தார்கள். தொடர்ச்சியாக மணி ஒலித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான

* பருத்தி, பட்டு, தையல் நூல் வகைகளும்
* சில்க் பலவர்ண தையல் நூல்களும்
* டுவைன் நூல்களும்

சிறந்த நவீன முறைகளில் தயாரிப்பவர்கள்.

சூப்பர் பிளே இன்டஸ்ரீஸ்

7, அப்துல் ஹமீட் வீதி

கொழும்பு - 12.

யாரோ பஸ் உடம்பின் தகரத்தில் கூட 'பட பட' வென்று தட்டினார்கள்.

'ஐ யோ' - சப்தங்கள் 'நிறுத்து' - கூவல்கள்.........

மூர்த்தி, இருக்கையை விட்டெழுந்தபடியே, பின் கண்ணாடி வழியாகப் பார்த்தான். விழுந்த மனிதன் நடைபாதையிற் புரண்டு, எழும்ப முயற்சிப்பது தெரிந்தது. மூர்த்தி உட்கார்ந்தான்.

வண்டியை நிறுத்தி, சாரதியுட்பட எட்டுப் பத்துப் பேர் இறங்கி, எங்கோ கிடந்த 'டிக்கட் மெஷினை' எடுத்து, கொண்டக்டரையுங் கைத்தாங்கலாக அழைத்து வந்தபோது, ஆளுக்குக் காயமொன்றுமில்லை என்பதை எல்லாரும் அறிந்து கொண்டார்கள். 'நல்ல காலம்' என்று சொல்வதற்கு, இதை விடவும் இன்னும் இரண்டு காரணங்களிருந்தன. ஒன்று - அவன் விழுந்தபோது பின்னால் ஏதும் வாகனங்கள் வராதது. மற்றது - சில்லறைகள் சிதறவில்லை.

பஸ், மெல்லப் புறப்பட்டது, யாரோ ஒரு நல்ல மனம் படைத்தவர் - வயதாளி - மூர்த்திக்குப் பக்கத்தில் இருந்தவர் - எழுந்து தன் இடத்தை அந்த விழுந்து போன மனிதனுக்காகத் தியாகஞ் செய்தார். எல்லோரும்- ஒவ்வொருவரும் தத்தம் அநுதாபங்களையும், அறிவுரைகளையும், ஓர் அசாதாரணமான பொறுப்புணர்வுடன் அந்த மனிதனுக்கு வழங்கிக் கொண்டிருந்தார்கள்- இவன் ஒருவனைத் தவிர.

இதனாலும், அந்த வயதானவரின் உணர்வுகூட இவனிடம் இல்லையென்று பட்டதாலும், சில பேருடைய பார்வை, மூர்த்திமேல் 'ஒரு மாதிரி' யாக விழுந்தாலுங்கூட, அவன் அவற்றைச் சட்டைசெய்ய முடியாமலிருந்தான்.

கொண்டக்டர் நடைபாதையில் விழுந்துருண்ட அந்தக் காட்சி,ஒரு கொழுக்கியாக அவன் மனதைக் கொழுவியெடுத்து, வேறு எங்கோ போட்டுவிட்டிருந்தது. சில நாட்களுக்கு முன்புதான். ஒருநாள் ஜனவரி பத்தாந் தேதி- இரவு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தின் முன் குழுமியிருந்த மக்கள் வெள்ளத்தின் ஒரு துளியாய் அவனும் நின்றிருந்தான்......... ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கத்தரித்து தங்கள் நண்பர்களுக்கு அனுப்புக)

மல்லிகை

நிர்வாகி, 'மல்லிகை'
234ஏ, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ஐயா,

'மல்லிகை'யின் சந்தாதாரராக என்னைச் சேர்த்துக் கொள்ளுங்கள். இத்துடன் ஓராண்டுச் சந்தாவாக எட்டு ரூபா ஐம்பது சதம் அனுப்புகிறேன்.

பெயர்: ______________________

முகவரி: ______________________

____

______________ ______________________

திகதி கையொப்பம்.

இந்த நாட்டு இலக்கிய வளர்ச்சியை ஆரோக்கியமான பாதையில் வளர்க்க உங்களுக்குச் சம்மதமா? அப்படியானால் உங்களது நேசக்கரத்தை எங்களுக்கு நீட்டுங்கள். உங்களது பூர்ண ஒத்துழைப்பு இருந்தால் இந்த நாட்டின் இலக்கியச் சரித்திரத்தை அப்படியே மாற்றி யமைத்துக் காட்டும் வல்லமை மல்லிகைக்கு உண்டு.

ஈழத்து இலக்கிய உலகை மகோன்னதமான நம்பிக்கையுடனும் புதிய கம்பீரத்துடனும் தீர்க்கமான எதிர்காலச் சிந்தனையுடனும் இடையரு உழைப்புடனும் நோக்குகின்றோம்.

இதில் பங்கு கொள்ளச் சம்மதமா?

புதிய யுகத்தைப் படைக்கும் இந்தச் சத்திய வேள்வியில் நம்முடன் இணைய விரும்பும் சகலரையும் நேச உணர்வுடன் வரவேற்கக் காத்திருக்கின்றோம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவருக்கு நேசக்கரம் நீட்டும் தமிழ்ச் சஞ்சிகை

பிரசித்திபெற்ற தமிழ் எழுத்தாளரான டொமினிக் ஜீவா அவர்களால் வெளியிடப்படும் **''மல்லிகை''** என்ற சஞ்சிகையின் **பத்தாவது ஆண்டு விழா** அண்மையில் நடைபெற விருக்கின்றது.

டொமினிக் ஜீவா அவர்களின் தனிப்பட்ட உழைப்பினுலும் தமிழ் எழுத்தாளரின் ஆதரவினுலும் தொடர்ந்து வெளிவரும் 'மல்லிகை' இலங்கையில் மட்டுமல்லாமல் இந்தியாவிலும் மக்களால் மிகவும் விரும்பிப் படிக்கப்படுகின்றது.

ஒருவகையில் பார்க்கும்போது 'மல்லிகை' தமிழ் எழுத்தாளரின் சஞ்சிகை மட்டுமல்ல, அது சிங்கள, தமிழ், முஸ்லிம் இனத்தவர்களுக்குப் பொதுவான, ஈழத்து எழுத்தாளரின் சஞ்சிகையு மாகும்.

தேசிய ஒருமைப்பாட்டையும் உயர்ந்த ஈழத்து இலக்கியத்தையும் உருவாக்குவதற்காக அயராது உழைக்கும் மல்லிகை பல சிங்கள எழுத்தாளர்களைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தி இருப்பதோடு ஏராளமான சிங்கள எழுத்தாளரின் படைப்புகளைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டும் இருக்கின்றது. அவர்களில் மார்ட்டின் விக்ரமசிங்ஹ, குணதாச அமரசேகர, கே. ஜெயத்திலக, ஈ. ஆர். சரத்சந்திர, குணசேன விதான, ஏ. ரீ. சுரவீர ஆகியோர் சிலராகும்.

எதிர்காலத்தில் தன்னுடைய சஞ்சிகை மூலம் மேலும் பல சிங்கள எழுத்தாளர்களைத் தமிழ்மக்களுக்கு அறிமுகப்படுத்தப் போவதாகத் திரு. டொமினிக் ஜீவா 'ஜனருசிய' வுக்குக் கூறினர்.

ஜனருசிய

(சிங்கள இலக்கிய இதழ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதகர்கள்

'செம்பியன் செல்வன்'

புயற்புரவி பூட்டியதென விரைந்துவந்த, போர் இரதத்தின் கடிவாளத்தைச் 'சடார்' எனச் சொடுக்கி இழுத்து — குரு க்ஷேத்திர மையத்தில் கொண்டுவந்து நிறுத்தினன் கிருஷ்ணன்.

பாஞ்சசன்யம் காலை இளங்கதிரில் பளபளத்தது.

அர்ஜுனன் பார்வை கௌரவ சேனையைக் கௌவியது. மனம் அதிர்ந்தது.

உறவுகள் பகையாகிப் போர்க்கோலம் பூண்டிருந்தன. அவன் அழிக்கப்போவது —

உறவுகளின் உயிரையா?
பகையின் உருவங்களையா?
காண்டீபம் கைநழுவி விழுந்தது.

மாயச் சிரிப்புடன் 'அர்ஜுனு!' என்ருன் சாரதி.

'கண்ணு! என் கண்ணுனவர்களின் உடல்களைப் புண்ணுக்கவா, நான் காண்டீபம் எடுத்தேன்?'

'அர்ஜுனு! காண்டீபம் கடமையைச் செய்யவே அருளப்பட்டது. உறவுகள் மாயை. கடமையைச் செய். பலனை எதிர்பார்க்காதே

— பகவான் கீதோபதேசத்தை குருக்ஷேத்திர மண்ணில் விரித்தான்.

— அதில் மனம் தோய, தேறிய அர்ச்சுனன் கேட்டான்:
'எல்லாம் சரிதான் கண்ணு! நீ என்னுடன் நிலவில்......தேனுற்றங்கரைகளில்......மாடமாளிகைகளில்......சோலைகளில் எல்லாம் இருந்திருக்கின்ருய் ... ... அப்போதெல்லாம் செய்யாத உபதேசத்தை, இந்த குருக்ஷேத்திரக் களத்தில் விரித்தென்ன?'

'கர்மவீரனே! அது என் அவதார ரகசியம்.
மனிதர்களுக்குப் பிரச்சினைகள் தோன்றும்போது,......அப்பிரச்சினைகளைத் தீர்க்க வழியோ, வகையோ தெரியாதபோது, அப்பிரச்சினைகளையே தர்மம், தியாகம் என நியாயப்படுத்தி போதிப்பதே இந்த ரகஸ்யமாகும்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எனக்குப் புரியவில்லையே?'

'உனக்குப் புரியாதுதான் . ...இதனை நன்கு புரிந்துகொள்ளக்கூடிய வர்கள் கலியுகத்தில்தான் தோன்றுவார்கள்...'

'யாரந்தத் திறமைசாலிகள்......?'

'நீ இன்று பாசத்தீயில் அகப்பட்டுத் தவிக்கையில் நான் வீசிய ஆறுதல் காற்று அதனை அடக்கிவிட்டதுபோல், கலிகாலத்தில் ஆட்சியாளரின் அநியாயத்தால் மக்கள் பசி, பட்டினி, வறுமை, நோய் எனத் துடிக்கையில், வெறும் வார்த்தைகளாலேயே அவர்கள் துன்பத்தை நியாயப்படுத்தி, ஆறுதலளித்து — தம்மை உயர்த்திக்கொள்பவர்கள் தோன்றுவார்கள். அவர் கள் என்னைவிடப் பெரியவர்கள். அவர்கள் இருப்பதால் என் அவதாரம் கலிகாலத்தில் இருக்கமாட்டாது. தேவையு மற்றது.'

'யாரவர்கள்?'

'அரசியல்வாதிகள்' — எனப் பாஞ்சசன்யம் ஒலித்தது.

மனையாட்சி

ஆளுகின்ற அரசை அவர்
அதி கனமாய் எதிர்த்திடுவார்
எதிர்க் கட்சிப் பெருந்தூண் — ஓம்!
ஆனாலும் ஆபத்து
அவருக்கு ஏதுமில்லை
அஞ்சாமை ஒளியூட்டி
ஆளுகின்ற கட்சியிலே
அங்கத்தவராக
அவர் மனைவி இருக்கையிலே
அவருக்கு என்ன இடர்? —
அவரது பிழைப்புக் கென்ன குறை?

- என். சண்முகலிங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக் கலாசாரப் பேரவை இஸ்லாமிய இலக்கிய ஆலோசனைக்குழு நடாத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றும் இடம்பெற்ற கதை:

வயிறுகள்

—எம், எச், எம். சம்ஸ்

பள்ளியை அடுத்துள்ள தனது 'பள்ளியறைக்கு' ஆமை வேகத்தில் வந்து சேர்ந்தார் 'காக்கே' சுவரோடு நெருங்கியிருந்த 'ச(வ)ந்தூக்கின்' மூடியின் மேல் அவரது பாய் சுருண்டு கிடந்தது.

மனுஷன் மேல்மூச்சு வாங்க பாயை மெதுவாக இழுத்தெடுத்து, கீழே விரித்தார். சாரத் தொங்கலில் சுற்றப்பட்டிருந்த 'பட்டர்பிஸ்கோத்' இரண்டையும் மடியிலிருந்து எடுத்து அருகேயிருந்த பிய்ந்த பெட்டிக்குள் போட்டுவிட்டு, 'அல்லாஹு...' என்று காலை நீட்டி அமர்ந்து கொண்டார்.

மூச்சை இழுக்கும் ஒவ்வொரு முறையும் கிழவன் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தார். விலா எலும்புகள் தோலைக் கிழித்துக்கொண்டு வெளிவர எத்தனித்தன. கால்மாட்டு சாரத்தை மெல்லத் தூக்கிவிட்டு முழங்காலுக்குக் கீழ் வரியப்பட்டிருந்த நெடும்பிடவைப் பட்டியை மெதுவாக அவிழ்க்கலானார். இடைக்கிடை நகங்களால் சொறிந்துகொள்ளும் போது தான் எவ்வளவு சுகம்? இந்தத் தருணம் பார்த்துத்தானு கொசுக்கூட்டமும் படையெடுத்து வரவேண்டும்? கால்களை மூடிக் கொண்டு சாய்ந்துவிட்டார் காக்கே. அவரது கந்தல் பொட்டணி தலையைத் தாங்கிக் கொண்டது.

'காக்கே' என்றால் தாத்தா என்று மலாய்ப் பாஷையில் அர்த்தம். இந்த மலாய்க் கிராமத்திலே காக்கே குடியிருக்க வந்து எவ்வளவு காலமிருக்கும் என்பது அவருக்கு ஞாபகமில்லை. பிறந்து வளர்ந்த கொழும்பை விட அந்தக் கிராமம் அவருக்குப் பிடித்து விட்டது. இனசனத்தர் என்று யாரும் அவருக்கு இல்லை. எவர்தான் ஏழைக் கிழவனுக்கு உறவு சொல்ல முன் வருவார்கள்?

அந்தக் கிராமத்தை வளப்படுத்தும் ஜீவ நதியான வளவை 1969-ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில் சீறிச் சினந்து என்ன பாடு படுத்திவிட்டது? பெரிய கல்வீடுகளே பிடுங்குண்ட மரமாகச் சிதறுண்டு போனல் காக்கேயின் சின்னஞ்சிறு ஓலைக் குடிசையின் கதி என்னவாயிருக்கும்?

அந்தக் குடிசையிருந்த இடத்தையும் காண முடியவில்லை. பாவம்! அதன்பின் கிழவனுக்குத் தஞ்சம் அந்தப் பள்ளியின் கூடம்தான்.

வெள்ளம் வடிந்து ஒருமாத காலம்வரை உணவும், உடையுமாக உதவிகள் தாராளமாய்க் கிடைத்தன; இப்போதெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் அப்பகுதிக்கு வருவதில்லை.

போக இடமின்றி நடுத் தெருவில் நின்ற காக்கேக்கு பள்ளியில் சாயம் பூசும் வேலை கிடைத்தது ஒருவகையில் 'வாசி' யாகி விட்டது. ஆள் பழைய 'பாஸ்' காலில் புழுக்கடியோடு போராடிய காக்கேயை ஆஸ்த்மா வியாதியும் வந்து தொற்றி அவஸ்தைப் படுத்தியது. கிழவன் என்பதால் வயிற்றுப் பசி மட்டும் சும்மா விடுமா? வயிற்றைக் கழுவுவதற்காக நோயையும் பொருட்படுத்தாது பள்ளி வேலையைப் பாரமெடுத்தார். வேலை முடிந்ததும் காக்கே பள்ளியை விட்டுப் போய்விடவில்லை. பள்ளி அறையில் தங்கும் ஆலிம் ஸாவுக்குத் தனிக்குத் துணையாக காக்கே அங்கேயே தங்கிவிட்டார். கிடைத்த கூலியால் ஒரு மாதத்தை ஒருவாறு தள்ளி விட்டார்.

இப்போதோ ஒரு நேரத்தைத் தள்ளுவதென்றால் ஊருக்குள் ஒரு 'ரவுண்' அடிக்கவேண்டியுள்ளது. மனுஷன் யாரிடமும் கைநீட்டாதபடியால் அவரது அபிமானிகள் அவரைக் கவனித்துக் கொள்வார்கள்.

ஆலிம்ஸாவுக்கோ வருஷத்தில் முந்நூறு 'ப்ரி சோறு' படும். அதில் இரண்டொன்று காக்கேக்கும் கிடைக்கும்.

ஆலிம்ஸா அதே ஊர்க்காரர். வயல். ட்ரக்டர் எல்லாம் சொந்தமாக வைத்திருக்கிறார். ,பராத்' மாதம் வந்துவிட்டால் ஆலிம்ஸாவின்பாடு உசார்தான். முட்டையும், ரொட்டியும் வெள்ளம் போல அவரின் அறையில் பெருகும். ஊருக்குள் பாத்திஹா கத்தம் ஓதி வேறு, ஒரு நூறு ரூபாவைத் தட்டிக் கொள்வார்.

இவற்றில் பத்துக்கு ஒன்று என்ற விகிதத்தில் காக்கேயின் பெட்டியிலும் ரொட்டிகள் நிறையும். ஒரு கிழமை வயிற்றுப் பாட்டைப் போக்கலாம்தான். என்றாலும் அந்த ரொட்டி மாதம் வருடம் ஒருமுறைதானே வரும்.

இன்று...... ...?

இரண்டே பிஸ்கட்டுடன் பகற் பொழுதைக் கழித்துவிட்ட காக்கே, தேயிலைப் போத்தலும் சீனிப் போத்தலும் காலியாகக் கிடப்பதைக் கண்டு வெறும் சுடுதண்ணீரை உள்ளே அனுப்பி விட்டு படுத்துக் கொண்டார்.

முந்தநாள் இரவு பள்ளிக்கு எதிரில் ஹாசீம் மத்திச்சம் வீட்டில் கோழி அறுத்துப் பெரிய கந்தூரி. காக்கே போன்ற 'எளியதுகள்' வந்தால் 'மௌலிது கலரி' 'மஸந்தாக' இருக்காது என்பது அவரது கருத்து. ஏழைகளைக் கூட்டிவந்து கொடுப்பதுதான் அன்னதானம் என்பதை மத்திச்சம் அறிந்திருந்தும் 'புளியேப்பக்காரரை' அழைப்பதில் ஒரு 'பிஸ்னஸ் ட்ரிக்' இருப்பதாக ரகசியமாகச் சிலரின் காதில் வைப்பதுண்டு.

என்ன இருந்தாலும் காக்கே ஒரு ரோஷக்காரன். அழையா விருந்துக்கு நுழைவது அவரது அகராதியில் இல்லாததொன்று. நேற்றிரவு அவருக்கு 'புரிச்சரிஸ்கு' ஒரு கோப்பைத் தேத்தண்ணீர்தான். 'அல்ஹம்து லில்லாஹ்' என்று அதோடு படுத்துக் கொண்டார்.

பள்ளியில் அஸருக்கு பாங்கு சொல்லும் சத்தம் கேட்கிறது. காக்கே மெதுவாக எழுந்து பாயில் உட்கார்ந்து கால்களைச் சொறிந்து கொண்டிருந்தார். உடலுக்கு ஞஹத்தில்லை. வயிறு வேறு 'குத்பா' ஓதிக்கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த அறையிலிருந்து முனகல் ஒலியொன்றிகேட்கிறது. காக்கே முக்கி முக்கி நடந்து சென்று அறைக்குள் எட்டிப் பார்த்தார்.

கட்டிலில் குப்புறப் படுத்து புரண்டு கொண்டிருந்தார் ஆலிம்ஸா.

'என்ன ஆலிம்ஸா, என்ன நடந்தது?'

முகத்தைச் சுழித்துக் கொண்டே கட்டிலிலிருந்து கழுத்தை நிமிர்த்தினர் அவர்.

''இரவு ஹாசிம் மத்திச்சம் ஊட்டில கோழி இறச்சால கொஞ்சம் கூடத் திண்டிட்டன். அப்பவே வஹுத்தில கொஞ்சம் பாரமாயிருந்துது. பகல் பழய ஆலிம்ஸா ஊட்டில கத்தம் திண்டிட்டு வந்து சாஞ்சன் வஹுத்துவலி தாங்கேலா காக்கே.........'

தலையணையை வயிற்றிலே இறுக்கிக் கொண்டு மறுபடியும் புரண்டார் ஆலிம்ஸா. திடீரென்று எழும்பி சட்டைப் பையில் கையை விட்டார். நாணயங்கள் சலசலத்தன. ஐம்பது சதக் குத்தியொன்றைக் காக்கேயின் கைக்குள் திணித்து 'ஆப்தீன் காக்கட கடேயில ஆனச் சோட ஒண்டு வாங்கீட்டு வாங்கோ' என்றார்.

இரண்டு பிஸ்கட் போதாதென்று அடம்பிடித்த வயிற்றையும் தாங்கிக்கொண்டு ஆமை நடை போட்டார் காக்கே, ஆப்தீன் காக்காவின் கடையை நெருங்கும்போது அவரது தலை சுற்றுவதுபோன்ற ஒரு பிரமை. வேகத்தைக் குறைத்துப் பார்த்தார். கண்கள் இருண்டன. அவரது நினைவுப் புலன்கள் செயலிழந்தன, அதன்பின் ஏடந்தவை........?

காக்கே கண்விழிக்கும்போது தான் படுத்திருப்பது ஆப்தீன் காக்கா கடையின் முன்வாங்கு என்பதை ஒருவாறு உணர்ந்து கொண்டார். எதிரில் ஐந்தாறு பேர் சுற்றி வளைத்து புதினம் பார்த்து நின்றனர். ஆலிம்ஸா கூட அங்கே நின்றிருந்தார். தாடியைத் தடவிக்கொண்டே அவர் சொன்னார்:

'ஸலீம் மொதலாளி விடேலாத மனுஷன். அவரு புதுசா எடுத்த வயல்ல இண்டக்கி மொதல்ல அறுவட செஞ்சதுக்கு ஒரு பாத்திஹா ஓதோணுமாம். இப்ப அதுக்குத்தான் போறன். சோடாவை காம்பிராவில வைங்கொ...... அல்லா சொகத்தத் தருவான்'

அந்தக்குரல் எங்கோ தூரத்திலே கேட்டது காக்கேக்கு. அங்கிருந்த புண்ணியவான் ஒருவர் வாங்கிக் கொடுத்த கோப்பியைக் குடித்துவிட்டு காக்கே சோடாவுடன் பள்ளிவாசலை வந்தடைந்தார்.

உள்ளே பள்ளியில் தஃலீம் வாசிக்கும் சத்தம் கனவுபோல் கேட்கிறது.

'நபிகள் நாயகம் கூறினார்கள்...... தனவந்தரைக் காட்டிலும் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே ஏழைகள் சுவர்க்கம் புகுவார்கள். ஆயிஷாவே ஒரு பேரீச்சம் பழப்பாதியேயாயினும் சரியே கொடுக்காமல் ஏழையை திருப்பி அனுப்பவேண்டாம்....

. பள்ளிக்கு வெளியே 'யா அல்ல' என்ற குரல் எழுந்தது. 'தஃலீம்' நடத்திய 'வணக்கவாளிகள்' ஓடிவந்து பார்த்தனர். காக்கேயின் வெளிறிய உடல் சரிந்து கிடந்தது! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி எங்கே?

ப. ஆப்டீன்

மலையகத்தின்
நங்கையவள்
பச்சையம்மா
பிள்ளைத்தாச்சி
வேலைக்குப் போனால்

'அஞ்சி நிமிசம்
பிந்திட்டே
அந்தநெரை எடு
இந்தநெரை எடு'
கங்காணி
அலைக்கழிக்கிறான்

கொழுந்திலை
மொட்டிலை
எடுத்து
கூடை நிறைய
பாரம் சுமந்து
கைசிவந்து
'விசில்' அடிக்க
கொழுந்து நிறுக்க
மடுவத்துக்குப் போனால்

'என்ன புள்ளே
காம்பெலே
முத்தெலே
இன்னக்கி
'பேரி' ல்லே போ!'
கொழுந்துகணக்கப்
பிள்ளை
விரட்டுறான்

சரிதான்னு
'ஆபிசு'க்கு
நியாயம்
கேட்கப்போனால்

'ஷீ இஸ் நொட் ஏ
ரெகுலர் வேக்கர்'
அடிவருடி
சுடுமூஞ்சிக்
கிளாக்கரும்
'தொரெ' பக்கம்

பச்சையம்மா
பாம்பாய்ச் சீறினாள்

ஜீவ மொழி

ஆமை புகுந்த வீடும் அமீனா நுழைந்த இல்லமும் உருப்படாது என்பது தமிழகத்துப் பழமொழி. இதற்கு ஏற்றாற்போல இப்பொழுது புதுமொழி யொன்றும் தோன்றியுள்ளது. சிவாஜி கணேசன் பேசி ஆதரித்த அரசியல் இயக்கமும் கண்ணதாசன் சேர்ந்திருக்கும் அரசியல் கட்சியும் உருப்படவே உருப்படாது.

★

சிவபெருமானைப் போன்றவர்கள் ஈழத்துத் தமிழர்கள். சிவன் பக்தர்களை சோதனையின் உச்சக் கட்டத்திற்குக் கொண்டு சென்று, பின்னர் 'பக்தா உன் பக்தியை மெச்சினேன்' என ஆட்கொள்வது போல, நம்மவர்களும் எழுத்தாளர்களைச் சகல வழிகளிலும் சோதனை செய்த பின்னர்தான் 'சரிதான் இவன் எழுத்தாளனேதான்!' என அங்கீகரிப்பதுடன் கௌரவித்து மதிக்கவும் செய்கின்றனர்.

★

உலகத்திலேயே பேச்சால் அழிந்த இனம் நமது தமிழர்களாகத்தான் இருக்க வேண்டும்: எங்கும், எதற்கும் பேச்சு, பேச்சு, பேச்சு! ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தமிழர்கள் பேசுவதை முற்றாகக் குறைத்துச் செயலூக்கத்துடன் காரியங்களைச் செய்ய முனைந்தால் தான் புதிய சிந்திக்கும் தலைமுறையை உருவாக்க முடியும் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாகவி இக்பாலின் நூற்றாண்டு விழா இம்மாதம் 21ந் திகதி ஆரம்பமாகின்றது. இம்மாபெரும் கவிஞனின் ஞாபகார்த்தமாக உலகுதழுவிய நினைவாஞ்சலிகள் பல நாடுகளிலும் நடைபெறவுள்ளன. நாமும் அக் கவிக்கோமானது ஞாபகார்த்தமாக இக்கட்டுரையைப் பிரசுரிக்கின்றோம்,

— ஆசிரியர்.

மகாகவி

இக்பாலும் — தொழிலாளி வர்க்கமும்

எச். எம், பி. முஹிதீன்

இந்தியாவின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவரான முஹம்மது இக்பால், உர்து இலக்கியத்தின் ஒப்பற்ற மணிச்சுடர். ஒளியற்று, இருள் நிறைந்திருந்த உர்து இலக்கியத்துக்கு, ஒளிக்கதிர் ஏற்றி புத்துயிர் அளித்த பெருமை, உரிமை எல்லாம் இக்பாலையே சாரும்.

கற்பனைச் செறிவும், கருத்து நிறைவுமிக்க கவிதைக் களஞ்சியமான இக்பால், உலகத்தில் பேரும் பெருமையுடனும் பட்டொளி வீசும் பல கவிஞர்களுக்கு ஒப்பு கூறும் விதத்தில், திறனும் திறனாய்வும் பெற்றவர். என்றாலும், இக்பால் இன்று ஒரு சிறு கூட்டத்தின் கையில் அகப்பட்டு அனாதரவாய், அல்லல் படுபவராய் தத்தளிக்கிறார். அவரை ஒரு எல்லையிட்ட கோட்டினுள், வரம்பிட்ட கூட்டினுள் அடைத்து அழகுபார்க்கும் சிலர், இக்பாலுக்கு புகழ்கூறும் ரீதியில், புதைகுழி தோண்டுகிறார்கள். பெருமை கூறுவதாகக் கூறி அவரின் பெருமைக்கு இழுக்கும், ஈனமும் ஏற்படுத்துகிறார்கள். உலகத்தோர் மத்தியில் தீயிலிட்ட பொன்னாகப் பேரொளி வீசும் தகுதிமிக்க இக்பாலை, இனம் என்ற சகதிக்குள் ஆழ்த்தி அமிழ்த்தி, அந்த அழகு தீபஸ்தம்பத்தின் சுடரொளியை அஸ்தமிக்கச் செய்கிறார்கள்.

இக்பால் வாழ, அமரத்துவம் பெற, உலகத்துக் கவிஞனாகத் திகழ வேண்டுமாயின், இன்றுள்ள அபாக்கிய நிலைக்கு சாவுமணி அடிக்கவேண்டும். மனித இனத்தின் வளர்ச்சியில், ஜனசக்தியின் புதுவாழ்வுக்கான போராட்டத்திலும், வெற்றியிலும், நல்நாட்டமும் நம்பிக்கையும் கொண்ட, நேர்மையும் நெஞ்சுறுதியுமிக்க எல்லா எழுத்தாளர்களும், கவிஞர்களும் இந்தப் பணியைத் தொடர்ந்து படர்ந்து வளரச் செய்ய முன்வர வேண்டும்.

'உழைப்புத்தான் உலகை இயக்குகிறது' என்று ஒரு பேரறிஞன் கூறினான். உழைப்பு இல்லாவிட்டால் உலகம் என்னவாகும் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். உலகத்திலுள்ள உழைக்கும் கரங்கள், வாழ்வு சிருஷ்டிக்கும் தொழிலாளர்களான பிரம்ம தேவர்கள் ஒரு தினம், ஒரு மணி நேரம் தங்கள் கைகளை உழைப்பிலிருந்து வாபஸ் பெற்றுவிட்டால், இயக்கும் சக்திகளுக்கு ஓய்வு தந்துவிட்டால், உலகின் நிலை என்ன? கதி என்ன? யந்திரம் சுற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுமா? உணவு கிடைக்குமா? வளம் பெருகுமா? வாழ்வு தழைக்குமா? ஒன்றுமே இல்லை. எல்லாம் சூன்யமாகிவிடும். வாழ்வு அஸ்தமித்துவிடும். ஊனம் வடியும் உயிரற்ற சடலத்திற்கு ஒப்பானதாக உலகம் உருக்குலைந்துவிடும். இது தாத்பரியமல்ல; தத்துவமல்ல; உலகோர் கண்ட உண்மை; வையகத்தோர் கண்களில் தினமும் பட்டுச் செல்லும் நிஜம். மறுக்கவும், மறைக்கவும் முடியாத யதார்த்தமிது.

அகிலத்தை அசைத்து அழகு பண்ணி வாழவைக்கும் மனித சமாஜத்தின் முதல்வர்களான, மூலகர்த்தாக்களான உழைப்பாளர்களை. தொழிலாளர்களை, விவசாயிகளை இக்பால் மறந்திருந்தால், புறக்கணித்திருந்தால் அவர் பூரணத்துவம் பெற்ற கவிஞராக இருந்திருக்க முடியாது. அதோடு, இன்று நம்மத்தியில் வாழ்கின்ற சில கவிஞர்களைப் போல், 'வாழ்ந்தும் இறந்தவராக'த் தான் இருந்திருக்க முடியும். வாழும்போதே, இறந்தவர்கள் இறந்தபின் வாழ முடியுமா? இக்பால் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே அமரத்துவம் பெற்றுவிட்டார். எனவேதான், இறந்த பிறகும் அவர் வாழ்கிறார் — அநித்திய ஜீவன் பெற்று வாழ்கிறார்.

கவித்திலகம் இக்பாலின் தொழிலாளி, விவசாய மக்களைப் பற்றிய ஆரம்ப பாடல்கள். ஆற்றொணுத் துயரில் எழுந்த துன்ப கீதங்கள் — துயர நாதங்கள் 'பாயா' என்ற கவிதையில் இக்பாலின் உள்ளக் குமுறல் வெளிப்படுகிறது. அவர் பாடுகிறார்:

''முதலாளி தொழிலாளியின்
இரத்தத்தைக் கொண்டு
இரத்தினம் உண்டாக்குகிறான்.
நிலச்சுவான் விவசாயியின்
வாழ்நாளை பாழாக்குகிறான்.
அரசன் வறிஞரை
நுகத்தில் மாட்டி
அழகு பார்க்கிறான்.
அட்டூழியத்தில் ஆழ்ந்த
ஜனங்களோ தூங்குகின்றனர்''

அடுத்து வந்த மிகச் சிறந்த கவிதைகளான 'அஸ்ராரே கூதி' (தன்னின் இரகசியம்) 'பியாமே மஸ்ரிக்' (கிழக்கின் கற்பனை', 'பெபூரே ஆஜம்' (கிழக்கினரின் கீதங்கள்) ஆகிய கவிதைகளில், தன்னைச் சுற்றியுமுள்ள பிரம்ம தேவர்கள், படும் அவதியை — அல்லலை உண்மைப்படியே, உள்ளது உள்ளதாகவே படம் பிடித்துக் காட்டினார்.

மனித சமாஜத்தின், குறிப்பாக தொழிலாளர்களின், விவசாயிகளின் வறுமையையும், வாழ்விழந்த வெறுமையையும் படம் பிடித்த இக்பால், அதற்கு மாற்றுக்காண எண்ணினர். வறுமையும், துயரமும், கண்ணீரும் கம்பலையும், காணுத பொருள்களாக வேண்டும் என்று கனவு கண்ட இக்பால், பொங்கி எழுந்த தனது எண்ண அலைகளை ''ஷிக்வா — ஜவாபே ஷிக்வா''வில் (முறையீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் பதிலும்), முறையீடாக ஆண்டவனின் சன்னிதானத்தில் வைத்து, இந்த நிலையில் புதுமலர்ச்சியும், மாற்றமும் தோன்ற மன்றாடினார். மனிதனின் சிக்கலான பிரச்சினைகளில் தலையிட மறுத்து, பொறுப்பேற்க இசையாது, 'உன் விதியை நீயே நிர்ணயித்துக் கொள்' என்று ஆண்டவன் முழுப் பொறுப்பையும் மனிதனின் மீது தூக்கிப் போட்டுச் செல்லவே, இக்பாலுக்கு சினம் பொங்கியது. கோபம் மேலேங்கி கொப்பளித்தது.

இந்த வேளையில், ருஷ்யநாட்டு மக்களின் அருந் தலைவன் லெனின் மறைந்தான். அவன் மறைவு கேட்டு ஆறாத் துயரில் ஆழ்ந்த இக்பால், ''லெனின், தேவ தூதர்கள், கடவுளின் கட்டளை'' என்ற உலகம் பிரசித்த கவிதையைப் பாடினார்.

லெனின் நாஸ்திகன். லெனினைப் பற்றி கவிக்கோமான் இக்பால் நன்கு அறிவார். என்றாலும், 'எவன் ஏழைகளுக்காக வாழ்கிறானோ, எவன் ஏழைகளுடன் வாழ்கிறானோ, எவன் ஏழைகளுக்குத் தன்னை அர்ப்பணித்து விடுகிறானோ, அவன் என்னோடு வாழ்பவனாகிறான்' என்ற திருமறையின் திருக்குரலை, ஆண்டவனின் வாக்கியத்தை உலகுக்கு எடுத்துக் காட்ட, லெனினை சுவர்க்க வாசியாக்குகிறார் மகாகவி இக்பால்.

லெனின் ஆண்டவனிடம் அழைத்துச் செல்லப்படுகிறான். ஆண்டவன், எல்லாம் இறை பெரியோன், லெனினைப் பார்த்து. 'உன் முறையீடென்ன?' என்று கேட்கிறார். தொழிலாளக் கவிஞன் இக்பாலின் துணைகொண்டு முறையீட்டைத் துவக்குகிறான் மக்கள் தலைவன் லெனின். முறையீடு துவங்குகிறது.

''ஆண்டவா,
உன் அனுமதியின் பேரில்
என் உள்ளத்தில் சதாவும் உழலும்
எண்ண அலைகளை
உன் முன் சமர்ப்பிக்கின்றேன்,
மன்னித்துக் கொள்.
நீ மண்ணினால் செய்த மனிதனா
இன்று பூமியில் வாழ்கிறான்?
பூமியின் கிழக்கிலே,
ஐரோப்பிய வெள்ளையன்தான்
ஆண்டவன்.
வடக்கிலே,
மின்னிடும் டாலர்கள்தான்
ஆண்டவன்!
டாலர் அறிவால். நாகரீகத்தால்,
ராஜதந்திரத்தால், ராஜ
சிருஷ்டிகளினால்,
சமத்துவம் பேசிக் கொண்டே
கிழக்கத்திய மக்களின் இரத்தத்தை
அணு அணுவாக உறிஞ்சுகிறார்கள்;
இதை, இறைவா
நீ அறியமாட்டாயா?

நீ சிருஷ்டித்த உலகிலே
உழைப்பவனுக்கு வாழ்வில்லை,
அவனை நீ கல்லாய்
படைத்திருந்தால் கூட
அவனுக்கு மன நிம்மதி
ஏற்பட்டிருக்குமே!
அது கூட அவனுக்கு இன்று இல்லையே!
உலகத்தை தூக்கிச் செல்லும்
முதலாளித்துவம் என்ற
கட்டு மரம் உடைந்து
நீருள் அமிழும் நாள் எந்நாளோ?
அந்த நாளை
என் ஆண்டவா நீ
துரிதப்படுத்த மாட்டாயா?
உன் சிருஷ்டியில்
பெரும்பான்மை யானவர்கள்
சிறகிழந்த பறவைகளாய்
சீரழிவது, சிதைவது
உன் கண்களில் படவில்லையா?''

லெனினுடைய முறையீடு, எல்லாம் வல்ல எம்பெருமானின், அகிலத்து நாயகனின் உள்ளத்தை தொடுகிறது. அவனுடைய உணர்ச்சிகளைத் தட்டி எழச் செய்கிறது. ஆவேசம் கொண்ட இறைவன், உணர்ச்சிப் பெருக்கில் தேவதூதர்களை அழைத்து, சினம் பொங்கக் கட்டளை பிறப்பிக்கிறான்.

''விழியுங்கள், விழியுங்கள்
சென்று, உலகத்து ஏழைகளை
எழுப்புங்கள்
உழைக்கும் கைகளே
ஏன் தயக்கம்? (உணர்வு பெறச் செய்யுங்கள்)
செல்வத்தின் சிகரமான
மாட மாளிகைகளையும்
கூட கோபுரங்களையும்
அசைத்து உலுக்கித் தரை
மட்டமாக்க வழி கூறுங்கள்!
எந்த ஜீவன்கள் நெற் கதிர்களை
நெடிய வளர்த்து
நெல் மணிகள் தந்தனவோ,
அந்த ஜீவன்களுக்கு
அவை கிட்டவில்லையாயின்
அந்த மணிகளைத் தீயிட்டுப்
பொசுக்கித் தள்ளுங்கள்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்பாலின் புரட்சி நாதம் உலகோரை பதைபதைக்க வைக்கிறது. இமயமென எழுந்த அவரின் எண்ணங்கள், சுரண்டும் சுக போகிகளுக்கு, 'வீணில் உண்டு களித்திருப்போர்', 'செல்வம் ஏறி நெறி கெட்டவர்கள்', 'பிறர் பங்கைத் திருடி வாழும் பக்காத் திருடர்கள்', 'சோம்பிக் கிடந்து சுவர்க்க போகம் அனுபவிக்கும் எத்தர் கூட்டம்' என்றெல்லாம் தமிழ் நாட்டின் புரட்சிக் கவி பாரதி சொல்லம்புகள் தொடுத்து, தாறுமாறுகத் தாக்கினுே அந்தக் கும்பலின் உடலில் பாய்ந்து, உள்ளத்தில் ஊடுருவிச் சென்று உயிர் குடிக்கும் கூர்மையான ஈட்டி முனைகளாக அமைந்தன இக்பாலின் கவிதா பாணங்கள்.

இதைத் தொடர்ந்து வெளிவந்த இக்பாலின் இரண்டு கவிதைகள், புரட்சி முரசொலி கிளப்பின. உழைப்பவனைச் சுற்றி இருந்த பகைப்புலனுக்குக் காரணம் தெரிந்து கொண்ட கவிக் கோமான் இக்பால், தீவிரவாதியானுர். 'அச்சமில்லை, அச்சமில்லை பொச்சரிப்பு தகர்க்க' என்று முரசொலி கிளப்பினுர். 'சங்கநாதம் செய்வோம்; சமடர்களைச் சரிப்போம்' என்று போர்க் குரல் உயர்த்தினுர்.

இயற்கை எழிலின் படப் பிடிப்பாக அமைந்த 'நட்சத்திரங்களின் நாதம்' (சரூத் இ அன்ஜம்) என்ற கவிதையில், இக்பாலின் போராட்ட உணர்ச்சி ஓங்காரக் குரல் கிளப்பியது.

> ''விழியுங்கள்,
> மேலே குன்றுகளையும், சிறு கானங்களையும்
> வசந்த காலம் அணுகிவிட்டது.
> கேளுங்கள்,
> பறவை இனங்கள் பாடுகின்றன.
> குருவிகள் குயிலோசை கிளப்புகின்றன,
> மானினம் மந்தகாச நடனமாடுகிறது,
> சிறு அணில்கள் கீச்சுக் குரலில்
> ஆனந்த நாதமெழுப்புகின்றன.
> சல சல என ஓசை கிழப்பிச் செல்லும்
> பேராற்றின் கரைகளிலே,
> சுகந்த புஷ்பங்களும், வாசனை மலர்களும்
> மொக்கிட்டு மலர்கின்றன.
> ஓடிவா,
> அவைகளை வந்து பார்!
> அவைகள் விழித்துவிட்டன,
> வாழ்வைப் பூரணத்துவப் படுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயத்தமாகிவிட்டன.
உன் உறக்கத்தைப் பார்த்து — அவை
கைகொட்டிச் சிரிக்கின்றன.
விழித்துக்கொள், எழுந்திரு!''

மனிதனை 'எழுச்சி கொள்ளத் தூண்டும் இக்பாலின் ஆவல், அணைகளை உடைத்துக்கொண்டு கரைபுரண்டு ஓடி வருகின்றது; திக்கெங்கும், திசையெங்கும் பாய்கிறது. 'ஷாகி நிமாவில்' இயற்கையைத் துணைகொண்டு, கும்பகர்ண நித்திரையைக் கலைத்து, பழைய சமுதாயம் அழித்து, உழைப்பவர் அதிகாரத்தில் புது சமுதாயம், புத்துலகு அமைக்க இக்பால் மனிதனை அறைகூவி அழைக்கிறார்.

''நீலத்திரை கொண்ட வான் முகட்டு,
தென்றல் பரிசத்தால் துள்ளிக் குதிக்கிறது.
கூட்டில் இருக்கை பிடிக்காமல்
பறவையினங்கள் வானவெளியில் வட்டமிடுகின்றன;
அதோ! மலையுச்சியிலிருந்து ஆடியசைந்து
ஓடிவரும் நீர்ப்பிரவாகம்,
புதுப்புது இடங்களைக் கைப்பற்றியும்,
தடைகளைத் தாண்டியும், எதிர்ப்பை முறியடித்தும்,
பாய்ந்தும் ஊர்ந்தும் வருவதைப் பார்!
மண்ணையும் கல்லையும் துணைகொண்டு,
வேகத்துடன் ஓடிவரும் நீர்க்குலம்
எந்த சக்திக்கும் அஞ்சவில்லை.
அஞ்சாத நெஞ்சத்தின் அணிகலன்.
வளைவையும், சுழிவையும், பள்ளத்தையும்
தாக்கித் தரைமட்டமாக்கிக் கொண்டு
ஓடிவரும் அந்தப் படை,
புது வாழ்வு காண விரைகின்றது,
புத்துலகு காண பாய்ந்து செல்கிறது.
ஓ சாக்கீ, சந்திர முகத்தோனே,
சற்று அதை உற்று நோக்கு!
உனக்கு அது பாடம் சொல்லித் தருகிறது.
புது வாழ்வில் திளைக்க, புத்துலகு காண,
பறந்து செல்ல அது உன்னைத் தூண்டுகிறது''

என்று, உழைப்பவனின் உள்ளத்தில் ஆவேசக் கனல் மூட்டுகிறார் இக்பால்.

இக்பாலின் கவிதைகள் மனித சமாஜத்திற்கு வழிகாட்டும்— திசை காட்டும் விடிவெள்ளி.

சுரண்டிப் பிழைக்கும் சுகபோகிகளை சுட்டெரிக்கும் எரிசரங்கள்; மனிதனை அடக்க முயலும் ஆணவம் பிடித்தவர்களின் மேல், ஏதேச்சாதிகார எத்தர்களின் மீது எட்டிப் பாயும் கூர்வாள்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனும் சட்டையும்

- லியோ டால்ஸ்டாய்

முன்னொரு காலத்தில் ஒரு அரசன் இருந்தான். அவனுக்குத் திடீரென ஒரு வியாதி பற்றிக்கொண்டது. உடனே, அரச சபையிலிருந்த மந்திரவாதிகள் அனைவரும் அரசனுக்குச் சிகிச்சை யளிப்பதுபற்றிக் கூடி ஆலோசித்தனர். அவர்களில் மிகவும் புத்திசாலியானவன் கூறினான். "இந்த சாம்ராஜ்யத்தில் வசிக்கும் மகிழ்ச்சிகரமான மனிதனின் சட்டையைப் போட்டுக்கொண்டு அரசர் ஒருநாளிரவாவது தூங்கினால், அவரது நோய் தீர்ந்துவிடும்."

உடனே அரசனது ஆட்கள் நாலாபக்கமும் மகிழ்ச்சிகரமான மனிதனைத் தேடி ஓடினர் எங்கு தேடியும், அவர்களுக்குக் கவலையில்லாத, சந்தோஷமான ஒரு மனிதனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒருவன் மிகவும் பணக்காரனாக விருப்பான்; ஆனால் அவனது உடல்நலம் குன்றியிருக்கும்; மற்றொருவன் ஆரோக்கியமாக இருந்தான்; ஆனால் பரம ஏழையாக இருந்தான், மற்றொருவன் பணக்காரனாகவும், ஆரோக்கியவானாகவும் இருந்தபோதும், ஒரு இராட்சசியை மனைவியாகப் பெற்றிருந்தான்; இன்னொருவனுக்குக் குழந்தைகளைப்பற்றிய கவலை இருந்தது. சுருங்கக் கூறின் ஒவ்வொருவருக்கும் ஏதேனுமொரு கவலை இருந்ததால், யாருமே மகிழ்ச்சியுடனில்லை.

ஒருநாள் அந்த அரசனின் புதல்வன், ஒரு சிறிய கீற்றுக் கொட்டகையைக் கடந்து செல்லும்போது, அதனுள்ளிருந்து ஒருவன் பேசும் குரல் கேட்டான்: "அப்பாடா! நான் நன்றாக உழைத்தேன்; சாப்பிட்டேன்; நல்ல தூக்கம்தான் எனக்குத் தேவை; எனக்கு வேறு என்ன கவலை!" என்று நிம்மதியுடன் தனக்குத் தானே சொல்லிக்கொண்டதைக் கேள்விப்பட்டவுடன், அரசகுமாரன், தனது சேவகர்களிடம், கொட்டகையில் படுத்திருக்கும் அந்தக் கவலையில்லாத மனிதனின் சட்டையைக் கொண்டுவரும் படியும், அவனுக்கு அதற்குப்பதிலாக நிறைய பொற்காசுகளைத் தரும்படியும் உத்தரவிட்டான்.

அரசகுமாரனின் சேவகர்கள் அந்தக் கீற்றுக் கொட்டகையினுள் நுழைந்தனர், கவலையில்லாத, மகிழ்ச்சிகரமான அந்த மனிதனது சட்டையை அவனிடமிருந்து எடுத்துவரத் துடித்தனர். ஆனால், அந்தோ! அவனை அவர்கள் நெருங்கியபோதுதான் அவனுக்குச் சட்டையே இல்லை என்பதைக் கண்டனர், ஆக, அந்த சாம்ராஜ்யத்திலிருந்த மிக மகிழ்ச்சிகரமான மனிதன், ஒரு சட்டைகூட வாங்க முடியாத அளவுக்கு பரம ஏழையாக இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். ஏ. நுஃமான்

இளங்கீரன் வெள்ளிவிழாவும் முற்போக்கு இலக்கியமும்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் எதிர்வரும் மே மாதம் 3-ம் திகதி கொழும்பில் இளங்கீரன் வெள்ளி விழாவைக் கொண்டாடுவதாகத் தீர்மானித்துள்ளது. கடந்த சில மாதங்களாகத் இவ்விசயத்தில் ஆர்வம் உள்ள சில நண்பர்களால் எடுக்கப்பட்ட முயற்சிக்கு இப்போது ஒரு ஸ்தாபன வடிவம் கிடைத்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

கடந்த கால் நூற்றூண்டுக்கு அதிகமாக இளங்கீரன் இலக்கியத் துறையில் உழைத்து வந்திருக்கிறூர். இருபதுக்கு அதிகமான நூல்களை வெளியிட்டுள்ளார். நூல்வடிவம் பெருது பத்திரிகைகளில் தொடர்கதைகளாக வந்த நாவல்கள் பல. அவர் ஆசிரியராக இருந்த தேசாபிமானி தொழிலாளி முதலிய பத்திரிகைகளிலும் தற்போது ஜனவேகத்திலும் அவரால் எழுதப்பட்ட அரசியல், இலக்கியக் கட்டுரைகளுக்கு ஒரு கணக்கில்லை. அவரது மரகதம் என்ற மாசிகை இன்னும் நினைவு கூரத் தக்கதாக உள்ளது. விஞ்ஞான சோஷலிசத்தில் பற்றும், உறுதியும், தெளிவும் மிக்க ஒரு முற்போக்காளர் அவர் என்பதை இப்படைப்புக்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

கலாச்சார முனையிலும், அரசியல் களத்திலும் பிற்போக்குச் சக்திகளை எதிர்த்து நெடுங்காலமாகப் போராடி வந்தவர் இளங்கீரன். சமூக முரண்பாடுகளையும், சுரண்டலையும், கொடுமைகளையும் ஒழித்து ஒரு புதிய சோஷலிச சமுதாயத்தை கட்டி எழுப்ப வேண்டும் என்ற இலட்சியத்தைத் தன் மூச்சாகக் கொண்டவர் அவர். முதலாளித்துவ மாயைகளில் சிக்கிச் சீரழியாது இன்றுவரை தன் ஆளுமையைப் பேணிக் காத்து வந்துள்ள பெருமை அவருக்குரியது. அவரது நேர்மையிலும் இதய சுத்தியிலும் சந்தேகப் படுவோர் இன்று இலங்கையில் யாரும் இல்லை எனலாம். ஆகவே அத்தகைய ஒரு கலைஞனின் கால் நூற்றூண்டு இலக்கிய சேவையை கௌரவி .பது அவசியமேயாகும். அது இளங்கீரன் என்ற தனிமனிதனுக்கு செய்யும் கௌரவம் மட்டுமல்ல. இலங்கை முற்போக்கு இலக்கியத்துக்கும் முற்போக்கு இயக்கத்துக்கும் செய்யும் கௌரவமும் ஆகும்.

இளங்கீரன் வெள்ளிவிழா இரண்டு அம்சங்களைக் கொண்டதாக அமையும். அவற்றுள் ஒன்று இளங்கீரனின் வாழ்க்கைக்கு உதவக்கூடிய வகையில் ஒரு தொகைப் பணம் சேர்த்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பது. இலங்கையில் எழுத்தையே தன் சீவியத்துக்கு ஒரு சாதனமாகக் கொண்டு வாழ்வதென்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. ஆனால் இளங்கீரனின் சொந்த வாழ்க்கை இதுகாலம் வரை எழுத்தினால் கிடைக்கும் அற்ப வருமானத்தையே ஆதாரமாய்க் கொண்டு நடந்து வந்திருக்கின்றது என்பது அவரோடு பழகும் எல்லோரும் அறிந்த ஒரு செய்தியாகும். பொது வாழ்க்கையில் ஈடுபாடும் இலட்சியப் பிடிப்பும் கொண்டு, அதற்காக முழுநேர ஊழியனாக உழைத்த இளங்கீரனுக்கு தன் சொந்த வாழ்க்கையை ஸ்திரப்படுத்திக்கொள்ள ஆர்வமோ, அவகாசமோ இருந்ததில்லை. இளங்கீரனின் சொந்த வாழ்க்கை மிகுந்த பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது என்பதை அவருடன் நெருங்கிப் பழகும் நண்பர்களே அறிவர். முதலாளித்துவ சமூக அமைப்பை முற்றாகத் துடைத்தெறியும் உறுதியோடு உழைக்கும் ஒரு கலைஞனின் இடர்களைக் களைவதற்கு முதலாளித்துவ சக்திகள் முன்வந்ததாகச் சரித்திரம் இல்லை. அது முற்போக்காளர்களின் கடமையாகும். ஆகவே முற்போக்கு ஆர்வலர்கள் இளங்கீரன் விழா நிதிக்கு உதவ மகிழ்வோடு முன்வருவார்கள் என எதிர்பார்ப்பதில் பிழை இல்லை,

விழாவின் இரண்டாவது அம்சம் இளங்கீரனின் முற்போக்கு இயக்க, இலக்கிய முயற்சிகளை மதிப்பிடுவதாக அமையும். இதுவே விழாவின் பொதுப் பயன்பாடும் ஆகும். இளங்கீரனின் முற்போக்கு நடபடிக்கைகள் மூன்று பிரிவுகளாக நோக்கத்தக்கன. அவரது இலக்கிய முயற்சிகள், பத்திரிகை முயற்சிகள், இயக்க நடபடிக்கைகள் என்பனவாக அவை அமையும். இவை மூன்றும் தனித்தனியானவை அல்ல. ஒன்றுடன் ஒன்று நெருங்கிய உறவு உடையவை. மேலும் இவை மூன்றும் இளங்கீரன் என்ற தனிமனிதனுடன் சம்பந்தப் பட்டவை மட்டுமல்ல. இலங்கையின் முற்போக்கு சக்திகளின் வளர்ச்சி வரலாற்றுடனும் ஒன்றிணைந்துள்ளன. ஆகவே இவைபற்றிய மதிப்பீடு இலங்கையின் முற்போக்கு இயக்க வரலாற்றையே மீள் ஆய்வு செய்வதாகவும் அமையும். கடந்த காலத்தில் முற்போக்கு இலக்கியத்தின் போக்கும், இயக்கத்தின் போக்கும், இன்று அதன் நிலைமையும் இனி அது செல்ல வேண்டிய பாதையும் என்ன என்பதை இன்னும் தெளிவுபடுத்திக்கொள்ள இந்த ஆய்வு உதவ முடியும். இன்றைய காலகட்டத்தில் இது மிகவும் அவசியமானதும் ஆகும்.

'முற்போக்கு' 'முற்போக்கு இலக்கியம்' என்ற சொற்கள் காலம் தோறும் வெவ்வேறு அர்த்த பாவத்தைப் பெற்று வந்துள்ளன. ஐம்பதாம் அறுபதாம் ஆண்டுகளில் சோஷலிச சமுதாய அமைப்பை நோக்கிச் செல்வதைமட்டும் 'முற்போக்கு' என்பது குறிக்கவில்லை. இருக்கின்ற சமூக அமைப்புக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான பல்வேறு சக்திகளும் முற்போக்கு என்ற பிரிவிலேயே அடங்கின. ஆனால் எழுபதாம் ஆண்டுகளில் முற்போக்கு இன்னும் தெளிவான அர்த்த பாவத்தைப் பெற வேண்டியுள்ளது. இன்றைய சமூக வளர்ச்சி நிலை, முன் எப்போதும் இல்லாதவாறு பல்வேறு சக்திகளையும் சோஷலிசம் பற்றிப் பேசியே ஆகவேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நிர்ப்பந்தத்துக்குள் தள்ளியுள்ளது. ஒரு புறத்தில் யூ. என்பியும் சோஷலிச உச்சாடனம் செய்கிறது. இன்னுமொரு மூலையில் மாக்சீயத்தையும் வென்ற பிரபஞ்ச தத்துவம் ஒன்றைத் தாங்கள் கண்டறிந்து விட்டதாக ஆன்மீக வாதப் பிற்போக்குக் கும்பல் ஒன்று வாய் வேதாந்தம் பேசுகின்றது. மறுபுறத்தில் வர்க்க முரண்பாடுகளால் கூர்மையுற்று சமூக முரண்பாடுகளைத் துடைத்தெறியும் வேகத்துடன் தொழிலாள, விவசாய வர்க்கத்தின் புதிய சக்திகள் கலைத்துறையிலும் திரண்டு வருகின்றன. ஆகவே 'இன்றைய காலகட்டத்தில் முற்போக்கு இலக்கியம் தெளிவான திட்டவட்டமான பாதையில் செல்ல வேண்டியது அவசியமாகும். வாய் வேதாந்த சோஷலிஸ்டுகளை, வாயளவில் முற்போக்குக் கோஷம் போடுபவர்களை அம்பலப்படுத்துவதசியம். ஆன்மீக வாதம் - அது எந்த வடிவங்களை எடுத்தாலும் லெனின் சொன்னது போல அவற்றுக்கிடையே உள்ள வேறுபாடு நீலப் பேய்க்கும் பச்சைப்பேய்க்கும் இடையே உள்ள வேறுபாடே என்பதைத் தெளிவாக்குவதும், வளர்ந்து வரும் சக்திகளுக்கு தத்துவார்த்த ரீதியான தெளிவான வழியைக் காட்டுவதும் இன்றைய முற்போக்கு இயக்கத்தின் கடமையாகும். இதற்காக இலக்கியத்தின் மூலம் போராடுவது அவசியமாகும். அதன் பொருட்டு பத்திரிகைகளையும் ஸ்தாபன அமைப்பையும, நாம் பயன்படுத்த வேண்டும். இளங்கீரன் வெள்ளிவிழா இதற்கான ஒரு புதிய உத்வேகத்தை நமக்குத் தருமாக இருந்தால் அதுவே அதன் பெரும் பயனாக அமையும்.

★

விடிவு

இன்னும் சிந்துவதற்கு எங்களிடம்
கண்ணீர் இல்லாத காரணத்தால்
இரத்தத்தைச் சிந்தினோம்
இழந்த நம் சுதந்திரத்தை
மீண்டும் பெறுவதற்காய்
ஓ! வங்கத்தாயே
எதிரிகளும் உன்னை
ஏற்றுக்கொண்டார்கள்!

நெய்தல் நம்பி

நியதி

இரவில் மழை
பகலில் வெய்யில்
எனவோர் ஒழுங்கிருந்தால்
ஏதும் சிரமமில்லை
என நினைத்த நான்
ஒழுக்குள்ள குடிசையில்
உறங்குவோர் நிலைபற்றி
எண்ணியே பார்க்கவில்லை.

ஜவாத் மரைக்கார்

உதவி

வாழ்வின் எல்லைக்கு
வந்த வயோதிபன்
காச நோயால்
காறி உமிழ்ந்த
கழிவுச் சளியை
காகம் ஒன்று
கவ்விச் சென்றது.

குமார் தனபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மல் செம்புலிங்கம்

- எம். ஏ. இஸார்

செம்புலிங்க நாடார் என்ற பெயரைக் கேட்டால் 'அழுத பிள்ளை வாய் மூடும்' என்று சொல்லிக் கொள்வார்கள். நான் பிறந்த சாத்தான் குளம் என்ற ஊரிலே, தென்னிந்தியாவில் திருநெல்வேலி ஜில்லாவிலிருக்கும் எங்கள் ஊருக்குப் பக்கத்தில் உள்ள கிராமத்தில் தான் செம்புலிங்க நாடார் என்ற கொள்ளைக் கூட்டத்தின் தலைவன் வாழ்ந்து வந்தான். அவனுக்குக் கொள்ளைக்காரன் என்ற பட்டத்தைச் சூட்டியவர்கள் நம்மை ஆண்டு வந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கொள்ளைக் கூட்டத்தார்கள் தான், வேறு யாருமல்ல.

சின்னஞ் சிறிய வயதிலே இந்த நாடாரைப் பற்றி பாட்டிமார்கள் சொல்லும் பயங்கர கதைகளில் காடுகளிலும், மலைகளிலும், அவன் வாழ்ந்து வந்த நாட்களைப்பற்றியும் அவனுடைய வீர தீர சாதனைகளும், மயிர்க்கூச்செறியும் சம்பவங்களும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. நீண்ட நாட்களுக்குப் பின்பும் அந்தக் கதைகள் எல்லாம் கனவுபோல என் நினைவுக்கு வந்தன. அவனுடைய ஜீவிய சரித்திரத்தில் — அவனுடைய மர்மம் நிறைந்த வாழ்க்கையில் பொதிந்து கிடக்கும் உண்மைகளையும் — தத்துவங்களையும் நான் வளர்ந்து பெரியவனாகிய பின்புதான் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. அதன்பின் இந்த நாடாரைப் பற்றி அறிய வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. அவனுடைய வாழ்க்கையைப்பற்றிப் படிப்பதற்கு புத்தகம் இல்லை. அவனைப் பற்றி யார் எழுதப்போகிறார்கள், அவன் ஒரு அரசியல் வாதியாக இருந்திருந்தால் அவனைப்பற்றிய வரலாறு எழுதுவதற்குப் பலர் போட்டி போட்டுக் கொண்டு முன்வந்திருப்பார்கள். அவனுக்குத்தான் கொள்ளைக்காரன் என்ற முத்திரையைக் குத்திவிட்டார்களே. ஆகவே அவனுடைய வாழ்க்கை வரலாற்றைப் பற்றி நாலு பேர்களிடத்தில் தான் கேட்டுத் தெரிந்துகொள்ளமுடிந்தது. அதன் பின் எனக்கு செம்புலிங்கம் ஒரு கொள்ளைக்காரனோ? என்ற சந்தேகம் ஏற்பட்டது. நாடார்கள் மத்தியில் வாழ்ந்து வந்த எனக்கு. ஒரு முஸ்லீம் பெரியார் அவனைப் பற்றி சொன்ன உண்மைச் சம்பவங்களைக் கேட்டபின் செம்புலிங்கம் ஒரு கொள்ளைக்காரன் அல்ல, பணக்காரனின் பரம விரோதி என்ற பேருண்மையை தெரிந்து கொள்ள முடிந்தது. சில வருடங்களுக்கு முன் 'ஜெம்புலிங்கம்' என்ற ஒரு சினிமாப் படம் வெளிவந்தது. அந்தப் படத்தைப் பார்த்தவர்களில் எத்தனை பேர்களுக்குத்தான் அவனுடைய சரித்திரம் ஒரு உண்மை வரலாறு என்று தெரிந்திருக்க முடியும், என்று சொல்வதற்கில்லை. 'மலைக்கள்ளனை'ப் போல இதுவும் ஒரு கதை என்று நினைத்தாலும் நினைத்திருக்கலாம். ஆனால் செம்புலிங்கத்தின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி சாத்தான்குளம் போலிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவேடுகளைப் புரட்டிப் பார்த்தால் அவனுடைய சரித்திரங்களை அந்த ஏடுகள் நமக்குச் சொல்லும்.

செம்புலிங்கத்தின் மனதை உறுத்தியது பணத்திற்கு மேல் படுத்துறங்கும் பணக்காரர்களும், கால்வயிற்றுக் கஞ்சிக்கு அவனைக் கெஞ்சும் ஏழைகளும் தான். இதற்கு ஒரு வழிகாண நினைத்தான். அவனைப் பொறுத்தவரை என்றுதான் அவனால் செய்ய முடிந்தது. பணக்காரர்களிடத்தில் குவிந்து கிடக்கும் செல்வத்தைக் கொள்ளையடித்து ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுக்க எண்ணினான். இதுதான் அவனுக்குத் தெரிந்த பொருளாதாரத் தத்துவம். தீவிரமாக செயலில் இறங்கினான்.

பணக்காரனுக்கு செம்புலிங்கம் என்றால் சிம்ம சொப்பனம். அவனுடைய நடமாட்டம் எந்தக் கிராமத்தில் தென்படுகிறதோ! அந்தக் கிராமத்து மிராசுதார்களும், பண்ணைக்காரர்களும் தங்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு உறக்கமின்றித் தன் செல்வத்தைப் பூதம்போல காத்து வந்தார்கள். இந்த அதிசயக் கொள்ளைக்காரனைப் பற்றி அந்த முஸ்லீம் பெரியார் சொன்ன சம்பவங்களில் இரண்டை மட்டும் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

எங்கள் ஊருக்குப் பக்கத்து ஊரான திசையன் விளையிலிருந்து இட்டமொளி என்ற கிராமத்துக்கு ஆஜானுபாகுவான ஒரு ஆறடி மனிதன் அடிக்கடி மாட்டு வண்டியில் பிரயாணம் செய்துவந்தான். ஒரு குறிப்பிட்ட வண்டியில்தான் அவன் பிரயாணம் செய்வது வழக்கம். ஒவ்வொரு நாளும் அந்தக் குறிப்பிட்ட வண்டியோட்டி அவனுடைய மாமூல் வாடிக்கைகாரனை எதிர்பார்த்து காத்திருப்பான். பகல் 11 மணிக்குள் அவன் வராவிட்டால் தான் மற்ற வாடிக்கையை அவன் கவனிப்பதுண்டு. ஒரு மாதத்தில் ஒரு சில நாட்களைத் தவிர தவறாது அந்த வண்டியோட்டிக்கு இந்த வாடிக்கை கிடைத்து வந்தது. அந்தக் காலத்தில் ஐந்து மைல் பயணத்துக்கு கால் ரூபாய் தான் வாடகை. அந்தச் சவாரியிலும் பேரம் பேசும் பெரிய மனிதர்களுமுண்டு. ஆனால் அவனுடைய வழமைச் சவாரிக்காரன் நாலணா இல்லை, ஒரு முழு ரூபாவைக் கொடுத்துவிட்டுப் போய்விடுவான். இதைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு நாளும் அந்த வண்டிக்காரனுக்கு ஒரு பேரதிசயம் ஏற்படும். தன் வாடிக்கைக்காரன் தோற்றத்தில் ஒரு பணக்காரனாகத் தெரியவில்லை. பயங்கரத் தோற்றத்தோடு, கையில் ஒரு நீண்ட தடியோடு காட்சியளிக்கும் அவன் ஒரு புரியாத புதிராகத் தோன்றினான். அவனுடைய நல்ல குணங்களையும், கொடுக்கும் கரங்களையும் கண்டு மகிழ்ந்தான் அந்த வண்டியோட்டி. சில சமயங்களில் சவாரி போகும் போது தன் கஸ்டங்களை எடுத்துச் சொன்னால், பார்த்தும் பார்க்காமலும் ஐந்து, பத்து கிடைத்துவிடும்.

ஒருநாள் காலையில் சவாரிக்கு தயாராகும் சமயத்தில் அவனுடைய மயிலிக்காளை எழும்ப மறுத்தது. ஆம் அந்த இடச்சானுக்கு நோய் கண்டுவிட்டது. மனமுடைந்து போனான் அந்த ஏழை. ஏழு பிள்ளைக்குத் தந்தை அவன். அன்று அவன் குடும்பம் பட்டினி;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு உழைத்துக் கொடுக்கும் அந்த வாயில்லா ஜீவனுக்கு வைத்தியம் பார்க்க பக்கத்துக் கிராமத்திற்குப் பாய்ந்தோடினன். காலை சுகப்பட்டு எழும்புவதற்கு மூன்று நாட்களுக்கு மேலாகிவிட்டது. ஐந்தாவது நாள் சோர்வோடு மாடுகளை வண்டியில் பூட்டி வழமைச் சவாரிக்குப் புறப்பட்டான். வழிநெடுக அவனைக் கவலை வாட்டி எடுத்தது. தன்னுடைய வழமைச் சவாரியை வேறு யாரும் பிடித்து விடக்கூடாது என்ற கவலைதான். பத்து மணியைக் குறிக்கும் வெயில் அவன் அடையாளம் வைத்திருக்கும் எல்லையைக் கடந்து விட்டது, 11 மணியைக் குறிக்கும் இடத்துக்கு அந்த வெயிலின் அடையாளம் நெருங்கிக் கொண்டிருந்தது. ஆளைக் காணோம். ஒரு விசில் சத்தம். அந்த ஒலி அவனைப் பொறுத்த வரை தெய்வீக ஒலி. அதுதான் அவனுடைய வாடிக்கைக்காரன் வருகையைத் தெரிவிக்கும் ஊது குழல்.

வந்ததும் வராததுமாக 'இந்த ஐந்து நாட்களும் என்ன செய்தாய்? உடம்புக்கு என்ன?' என்று குசலம் விசாரித்தான் வாடிக்கைக்காரன். 'எனக்கென்ன எஜமான். குத்துக் கல்லாட்டம் இருக்கிறேன். என் மயிலிக் காலைக்குத்தான் கோமாரி நோய்' என்று நிலமையைச் சொன்னன்.

ஏழைகளுடைய கஸ்டத்தை உணர்ந்து உதவும் செம்புலிங்க நாடானைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவனை நான் என்றுமே கண்டதில்லை என்று தன் மனதில் உள்ள நீண்ட நாள் ஆசையை எடுத்துச் சொன்னர். இதை எல்லாம் கவனமாகக் கேட்டுவந்த அந்த வழமைப் பிரயாணி, செம்புலிங்கம் ஒரு கொள்ளைக்காரன் என்பது உனக்குத் தெரியுமா? என்று கேட்டான். வண்டியோட்டிக்கு இவ்வளவு நாளும் பார்த்தும் பாராமலும் கொடுத்து வந்த அந்தப் பரோபகாரப்பயணியை வெறித்து நோக்கினன். நீங்கள் எனக்குப் பல உதவிகள் செய்திருக்கிறீர்கள். ஆனதால் உங்களை எதிர்த்துப் பேச என் நா எழ மறுக்கிறது. நன்றியுள்ளவன் நான். ஆனல் வேறுயாரும் செம்புலிங்கத்தைப்பற்றி கொள்ளைக்காரன் என்று சொல்லியிருந்தால், அவன் இந்த வண்டியில் தொடர்ந்து பிரயாணம் செய்திருக்க முடியாது. எனக்கோ செம்புலிங்கம் கறுப்போ சிவப்போ என்று தெரியாது. அவனைப் பற்றி நான் கேள்விப்படும் செய்திகள் அவனல் உதவி பெற்றவர்களின் அனுபவங்களைக் கேட்டவன் நான். அவனை ஏழைகளின் தெய்வம் என்று எண்ணிவருகிறேன். என்று தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தினன். இதைக் கேட்ட அந்த பயணி, 'சரி, செம்புலிங்கம் கிடக்கட்டும். ஒரு ஜோடி நல்ல ஜாதி மாடுகள் வாங்குவதற்கு எவ்வளவு ஆகும்?'

வண்டியோட்டிக்கு இந்தக் கேள்வி ஒரு அசரீரி வாக்கு மாதிரித் தோன்றியது. சற்று முன்பு அவனுக்கு ஏற்பட்ட கோபம் மறைந்து விட்டது. 'எஜமான் ஒரு 150 ரூபாய் இருந்தால் போதும். நல்ல ஜோடிக் காளைகளாகப் பார்த்து வாங்கலாம். ஆனல் யார் எனக்கு இந்த உதவிகளைச் செய்யப்போகிருர்.

இறங்கவேண்டிய இடம் வந்ததும் பத்து ரூபாயைக் கொடுத்துவிட்டு குறுக்குப் பாதையில் வேகமாக நடக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JUST OUT

Alagu Subramaniam's

CLOSING TIME

&

OTHER STORIES

Price: Rs. 4/-

Obtainable from:

Mrs Alagu Subramaniam,

"Alagapuri,"

Uduppiddy.

அந்த நெடிய உருவத்திற்கு வணக்கம் செலுத்தினான் வண்டிக்காரன். அவன் கண்களிலிருந்து நீர் சுரந்தது. நன்றி உணர்ச்சியின் அடையாளமாக வழக்கத்திற்கு மாறாக ஒரு மரநிழலில் வண்டியை அவிழ்த்து மாடுகளுக்கு வண்டியின் அடியில் வைத்திருந்த வைக்கோலைப் போட்டுவிட்டு அவனும் சற்று இளைப்பாறினான். அடுத்த நாளும் ரொம்பக் கஸ்டத்தோடு மாடுகளைப் பூட்டி தன் வழக்கமான இடம் வந்தடைந்தான். வழமைச்சவாரியும் கிடைத்தது. மாடுகளை விரட்டவேண்டாம். அதன் போக்குப்படி போகட்டும். சற்று தாமதமானாலும் பரவாயில்லை என்று சொன்னான் அந்த வழமைப் பயணி. வழக்கமான இறங்கும் இடம் வந்ததும், வண்டிக்காரன் கையில் ஒரு பையைக் கொடுத்துவிட்டு வேகமாக நடையைக் கட்டினான் அந்த மாய மனிதன். வண்டியோட்டிக்கோ அந்தக் கனமான பையைப் பார்த்ததும் பெரிய ஆச்சரியம். அந்தப் பொட்டணத்தைப் பிரித்துப் பார்க்கும் முன்பே கொடுத்தவனைக் காணவில்லை. பையில் 1000 வெள்ளி ரூபாய்களைக் கண்டதும் மெய் மறந்தான். அவன் வாழ்க்கையில் மொத்தமாக என்றும் காணாத செல்வம். அதோடு ஒரு ஓலையில் கோணல் மாணலாக செம்புலிங்கம் என்று எழுதப்பட்டிருந்தது. நான்கு ஐந்து முறை எழுத்துக் கூட்டு வாசித்தும் செம்புலிங்கம் என்று கண்டு பிடிக்க அந்தப் படிப்பில்லாத வண்டியோட்டிக்கு ரொம்ப நேரம் பிடித்தது. தன்னை மறந்தான். அவன் சென்ற திக்கை நோக்கி நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்து வணங்கினான்.

அடுத்தநாள் மாட்டுச் சந்தைக்குப் புறப்பட்டான் வண்டிக்காரன். நல்ல ஒரு ஜோடி உயர்ந்த சாதிக் காளைகளை வாங்கினான். முதன் முதலாக செம்புலிங்க நாடாருக்கு பூசை செய்து வண்டியில் பூட்டினான். அந்த நாடாருக்கு வெற்றிலை பாக்கு பழங்களோடு வழக்கமான இடத்தை நோக்கி புறப்பட்டான். குதிரை வேகத்தில் பறந்தது அவனுடைய புதிய காளைகள். அவன் வாழ்க்கையில் என்றுமில்லாத இன்பத்தைக் கண்டான் அடுத்தநாள் குறிப்பிட்ட இடத்தை வந்தடைந்து நீண்ட நேரம் காத்திருந்தான். செம்புலிங்கத்தைக் காணவில்லை கண்ணீர் விட்டுக் கதறினான். இப்படிப் பல நாட்கள் கண்ணீரோடு திரும்பினான். ஆனால் அவன் சாகுமட்டும் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் செம்புலிங்கப் பூஜை செய்ய அவன் மறப்பதில்லை. அவனைப்பொறுத்தவரை செம்புலிங்கம் அவனுடைய கடவுள்! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில அபிப்பிராயங்களும்

சிநேகபூர்வமான

சில கருத்துக்களும்

டொமினிக் ஜீவா

இதில் முதலாவது பகுதியினரை நாம் அவர்களது செயல்கள் மூலமும் கருத்துக்கள் வாயிலாக அறிந்துகொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டு விடுகின்றது. எனவே அவர்களைப்பற்றிய பிரச்சினைக்கு இங்கு இடமில்லை. ஒட்டு மொத்தமாக இவர்களையும் இவர்களினது கருத்துக்களையும் நாம் நிராகரிக்கின்றோம்.

அடுத்து வருபவர்கள் தான் இரண்டாவது பகுதியினர். இந்த இரண்டாவது பகுதியினர் இருக்கின்றனரே — மிக மிகக் கவனமாக நாம் நெருங்கிப் பார்த்து, நமக்குள்ளேயே தீர்க்கமாகக் கணிப்பீடு செய்து வைக்கப்படவேண்டிய கறட்டி ஓணான்கள் 'இது' கள்.

மார்க்ஸிசத்தின் மூல வித்துக்கள் நாங்கள் தான் என மற்றவர்களை வலுக்கட்டாயமாக நம்பவைப்பதில் முழு மூச்சுடன் செயல்படும் இந்தப் புதுச் சிவப்புகள், இலக்கியத்தில் அசகாய சூரத்தனமான கருத்துக்களை முன் வைத்துத் தம்மை வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொள்வதில் முன் நிற்பவர்கள். இந்த ஓணான்கள் எடுத்ததற்கெல்லாம் மார்க்ஸிசம் பேசும் கிளிகள். அரசாங்கங்கள் தோன்றி மறையும் போது இவற்றின் நிறங்களும் தத்துவங்களும் உபதேசங்களும் அடிக்கடி மாறும்; இடைக்கிடையே புது உத்திகளும் தோன்றும்.

இவற்றில் சில துகள் இப்பொழுது புதிய கண்டுபிடிப்பைச் சொல்ல முன் வந்துள்ளன.

'சாதிப் பிரச்சினையை எழுதுவதால் மாத்திரம் முற்போக்கு — மார்க்ஸிச எழுத்தாளனாகி விட முடியாது!' என இவர்கள் இப்பொழுது குரல் உயர்த்தத் தொடங்கியுள்ளனர்.

......நிலப் பிரபுத்துவத்தின் மிச்ச சொச்ச நாசங்களான சாதி அகம்பாவம், சாதிக் கொடுமை, உயர்வு தாழ்வு கற்பித்தல், மனித இழிவை அங்கீகரித்தல் போன்றவற்றை ஏதோ அசட்டுத்தனமான சம்பவமாகக் கற்பித்துக் கொண்டு அசட்டையாக இருப்பவன் எப்படிப்பட்ட நல்லவனாகவும், நேர்மையாளனாகவும், தொழிலாளி வர்க்கத்தின் பாதுகாவலனாகவும், உண்மையான மார்க்ஸிட்டாகவும் இருந்தாலும்கூட நான் அவனை எக்காரணம் கொண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிக்கத் தயாராக இல்லை. அவனது வர்க்க நேர்மையை நான் பூரணமாகச் சந்தேகிக்கிறேன்.

அதற்காக நான் சாதிப் பிரச்சினையையும் வர்க்கப் பிரச்சினையையும் ஒரே நோக்கில் பார்ப்பதாக இதற்கு அர்த்தம் கற்பித்துவிடக் கூடாது. எதிரி வர்க்கத்தை அழித்தால் தான் நமது வர்க்கம் ஆதிக்கம் பெறும். ஆனால் உயர் சாதியை அழித்து தாழ்ந்த சாதியை ஆதிக்கம் பெற வைப்பது என்பதல்ல சாதி அகற்றும் போராட்டம். வர்க்கப் போராட்டம் இன்னொரு வர்க்கத்தை அழிப்பது. சாதிப் போராட்டம் சாதி அகம்பாவத்தை, செயலை, இழிவை அகற்றுவது.

இந்த அடிப்படையைத் தெளிவாகப் புரிந்து கொண்டு தான் இந்த நாட்டில் பரம்பரை முற்போக்கு எழுத்தாளர்கள் தங்களுடைய கண்ணுக்கு நேரே நடைபெற்றுவரும் மனித இழிவுகளைக் களைவதற்காக எழுதி வந்துள்ளார்களே தவிர, அவர்கள் குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் பிறந்து விட்டார்களே என்ற தாழ்வு மனப்பான்மையில் அல்ல என்பதை இந்த 'உயர் குல சோஷலிஸ்டுகள்' உணர வேண்டும்.

இப்பொழுது இலக்கிய உலகில் சோஷலிஸம் புதிய உருவில் வளருவதை என்னால் உணர முடிகிறது. சாதிப் பிரச்சினையை அதன் கொடுமையை எதிர்த்து எழுதுகின்றவர்களைப் பார்த்து நையாண்டி பண்ணும் ஓர் உயர் குல சோஷலிஸக் கூட்டமொன்று இடம் பிடிக்க முனைந்து வருவதையும் முற்போக்கு எழுத்தாளர்கள் கவனத்தில் வைத்திருப்பது நல்லது.

இதே சமயம் ஓர் உண்மையை இந்த உயர் குல மார்க்ஸிட்டுகளிடம் கேட்கத் தோன்றுகின்றது. நில மானிய சமூக அமைப்பின் எச்ச மிச்சம்தானே இந்தச் சாதி அமைப்பு? இதை எழுத வசதிக்காக இந்த எழுத்தாளர்கள் உருவாக்கி விடவில்லையே! இந்தப் பிரச்சினை அந்த எழுத்தாளர்களின் மூளைக்குள் கற்பனையாக உருவெடுத்ததுமல்லவே!

இந்த உயர் குல மார்க்ஸிட்டுகள் யோக்கியதை இருந்தால் நெஞ்சைத் தொட்டு ஒன்றைச் சொல்லட்டும். தேநீர்க் கடைப் போராட்டம், ஆலயப் பிரவேசப் போராட்டம் மற்றும் மனித உரிமைப் போராட்டம் போன்றவைகள் வட பிரதேசத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது இவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? 'மனிசி ஆங்கிலப் படம் பார்க்க கன நாளா ஆசைப்பட்டாள், அந்த லீவிலை அவளை இங்கிலீஸ் படத்திற்குக் கூட்டிக்கொண்டு போனனான்!' என்று சமாதானம் சொல்லப் போகிறார்களா? அல்லது கொழும்பிலே இருந்து கொண்டு மார்க்ஸிசப் புத்தகத்தைப் புரட்டி வைத்துக்கொண்டு தத்துவ விளக்கம் பெற்றுக் கொண்டிருந்தார்களா?

இந்த ஒன்றுகளும் இந்தச் சமுதாய அமைப்பிலே தான் வாழ்ந்து கொண்டிருந்தன! இருக்கின்றன. மனித வாழ்வு, மனித உரிமை கேட்டதற்காக சாதிக் காடையரால் அடித்து, உதைத்து, வெட்டப்பட்ட பொழுது இவர்கள் இதை உணரவில்லையா? அவர்களினது நெஞ்சில் இலக்கியக் கருத்துக்கள் தோன்றவில்லையா? இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடைய பேளு என்னத்தைதச் செய்து கிழித்து விட்டது?

ஒரேயொரு கதை, நாவல், கட்டுரை, கவிதை எழுதினுர்களா? — கிடையாதே!— இன்று வரை இல்லையே!

சாதி வெறியனை மன்னிக்கலாம். ஏனெனில் அவன் தனது வாழ்வுமுறை, நம்பிக்கை இந்தச் சமுதாய அமைப்பில் அவனது பாத்திரம் ஆகி-வைகளை வைத்து முற்று முழுதாக நம்பித் தவறு செய்தான்.

ஆனுல் இவர்களோ?—

அவனை விடப் பயங்கரமானவர்கள். அபாயகரமானவர்கள். சமுதாயச் சனியன்கள்!

இவர்கள் இலக்கியத் துறையில் பிரச்சினையைத் திசைதிருப்பப் பார்க்கின்ருர்கள். தங்களது அடி மனதில் படிந்துள்ள உயர் சாதி அகம்பாவத்தின் வேஷதாரித் தனத்தை மறைக்க மார்க்ஸைச் சாட்சிக்கு அழைக்க முயற்சிக்கின்ருர்கள் என்பதைத் தான் என்ருல் புரிந்துகொள்ள முடிகின்றது.

நம்மவர்கள் என நாம் அழைப்பவர்களில் சிலர் மனதிற்குள் சாதி அகம்பாவத்தை மூடி மறைத்து போலியாகச் சோஷலிஸம் பேசுவோரையும் எனக்கு ஏற்கனவே தெரியும். அதே போல, நம்மவர் அல்லாதவர்கள் என நம்மால் அழைக்கப்படுபவர்களில் சிலர் இலக்கியத்தில் என்ன கருத்துக் கொண்டிருந்த போதிலும் மனிதனை மனிதனுக நடத்த, நேசிக்க, பண்பு காட்டத் தெரிந்தவர்களும் இருக்கிருர்கள்என்பதும் எனக்குத்தெரியும்.

இப்படியான கருத்துக்கள் தோன்றுவதற்கு மக்களிடமிருந்து நம்மவர்களில் பலர் பிரிந்திருப்பதும் ஓரளவு காரணமாக அமைந்துள்ளது என்றே நான் கருதுகின்றேன்.

சரியாகவோ பிழையாகவோ கொழும்பு மாநகரமே நமது இலக்கியத்திற்கும் தலை நகராக மாறி வந்துவிட்டது.

தமிழர்கள் வட பிரதேசம், கிழக்கிலங்கை, மலையகம் போன்ற இடங்களில் செறிந்து வாழ்கின்றனர். கொழும்பில் உத்தியோகத்திற்கும் வியாபாரத்திற்கும் போனவர்களே அதிகம்.

இதில் விசித்திரம் என்னவென்ருல் அந்த அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களினுடைய இலக்கியப் பிரச்சினைகளையும் மற்றும் பல்வேறு பிரச்சினைகளையும் விவாதித்து முடிவெடுத்துச் செயலாற்றுபவர்கள் அந்த மக்களின் வாழ்விலிருந்து நீண்டகாலமாகத் துண்டிக்கப்பட்டுள்ள கொழும்புத் தமிழர்கள் தான் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

என்னுடைய மிக நெருங்கிய நண்பர்கள் கொழும்பில் தான் வாழ்கின்றனர். நானும் கொழும்பு மா நகரத்துடன் தான் எனது இலக்கிய உறவை வலுப்படுத்தியுள்ளேன். என்ருலும் கூட ஈழத்து இலக்கிய உலகின் ஆதிக்கம் கொழும்பிலேயே உத்தியோகம் தேடிச் சென்று குடியேறி, முடிவில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு ஆண்டுக் கணக்காக காலடி வைத்தறியாத இலக்கிய ஜரம்பவான்களின் கையில்தான் அடங்கியுள்ளது. முழுத் தேசத்தின் இலக்கியத் தலைவிதியை நிர்ணயிக்க இவர்கள் முற்படுகின்ருர்கள் என்ருல் இந்த ஆதிக்கம் முடிவில் எங்கே கொண்டு செல்லும்?

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன வியாபார உலகில்
அழகும் மனதைக் கொள்ளை கொள்ளத்தக்க
கவர்ச்சியும் புதுமையும் மிகமிக இன்றியமையாதவை
அழகான கவர்ச்சிமிக்க
* அட்டைப் பெட்டிகள்
பாவனைக்கேற்ற
* கைப் பைகள்
ஆகியவற்றிற்கு
விஜயா இன்டஸ்ரீஸ்
236, பழைய சோனகர் தெரு,
கொழும்பு - 12
நேர்த்தியாகப் புத்தகம் கட்டுவோர் என்று பலரும் புகழும் ஸ்தாபனம்

Yarl Education Institute
பௌதீகம், தூயகணிதம், பிரயோககணிதம்.
G. C. E. (O. L.) & (A. L.)
பின்னேர வகுப்புக்கள் 14.4.74
புதுவருட தினத்தன்று ஆரம்பமாகும்.
அனுபவம் வாய்ந்த விஞ்ஞான பட்டதாரிகளால்
கற்பிக்கப்படுகின்றது.
(மாணவிகளுக்கு வகுப்புகள் வேறாக நடாத்தப்படும்)
"பௌதீகம்" G. C. E. (O. L) ஆரம்பமாணவர்க்கு
விசேட வகுப்புக்கள் நவீன விஞ்ஞான முறையில்
உறுதியான அடிப்படை அறிவிற்கு ஏற்றதாயிருக்கும்.
விபரங்களுக்கு
304, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
103, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mallikai *Registered as a Newspaper in Sri Lanka*
APRIL 1974

Popular Science Books From U.S.S.R.

NOW AVAILABLE

	Rs. cts.
Physic and Music	4-50
The Clock of Living Nature	3-00
Outer Space and Man	3-00
Space and Time Perception by the Cosmonaut	3-00
The Moon and Man	3-00
In the Search for Beauty	3-00
The Quiet Sun	3-00
The Atom from A to Z	4-00
Wonders of the Night Sky	4-50
The Nine Colours of the Rainbow	5-50
The Mystery of the Earth's Mantle	3-00
This Chaney Chaney Chaney World	3-50
Man Versus Climate	3-00
Matter and Man	3-75
Cybernetics Within us	4-00

PEOPLE'S PUBLISHING HOUSE,

124, Kumaran Ratnam Road,

COLOMBO - 2.

Telephone : 36111

234 A, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும், ஆசிரியரும் வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களால் மல்லிகை சாதனங்களுடன் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா அச்சகத்திலும்—அட்டை யா. மா. பல நோக்குக் கூட்டுற வுச் சங்க கூட்டுறவு அச்சகத்திலும் அச்சிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org